ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	பெய்கன்டான் யாண்டு-எகக சித்திரைத்திங்கள் 1934ஹு ஏப்ரல்மூ—மேமூ	பரல் கூ

திருநாவுக்கரசு அடிகள் தேவாரம்

இருட்டரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருட்டரு கண்ணிழந் துண்பொரு ணாடிப் புகலிழந்த
குருட்டருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருட்டரு கைகொடுத் தேற்றுமை யாற னடித்தலமே.

பதவுரை:—

ஐயாறன் அடித்தலம்—திருவையாறு என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளும்;

துன்பம்தரு—(உலகவாழ்வில்) துன்பத்தையே தருகின்ற

இருள் படல் மறைப்ப—ஆணவ மலமாகிய படலமானது உயிரை மறைத்தலினால்,

மெய்ஞானம் என்னும் பொருள்—உயிருக்கு இயல்பாய் எங்கும் நிறைந்துள்ள மெய்அறிவு என்ற நற்பொருளை

தருகண் இழந்து—கொடுக்கின்ற அகக்கண்ணைப் பெறாதுவிட்டு

உண்பொருள் நாடி—புறக் கண்களால் நாடித்தேடி நுகர்கின்ற நுகர்வுப் பொருள்களையே நாடித்தேடி நுகர்ந்து கொண்டிருந்து

புகல் இழந்த குருடரும்—தாம் உய்தற்குப் பற்றுக்கோடாயிருக்கிற பொருளைப் பற்றுதலைவிட்ட அறியாதவர்களும்

தம்மைப் பரவ—தங்களைத் துதிக்க (அத்துதியின் பயனாக)

கொடு நரகக் குழிநின்று—கொடிய துன்பத்தை நுகரச் செய்கிற நரக மாகிய குழியினின்றும்,

அருள்தரு கை கொடுத்து ஏற்றும்—அருளையே செய்கிற கைகளினால் ஏறும்படி செய்து துன்பத்தினின்றும் விடுவிக்கும்.

விளக்கவுரை:—

ஐயாறன் அடித்தலம்—திருஐயாறு என்ற தலம் ஐந்து ஆறுகளும் ஒன்று சேர்ந்து ஒரு ஆறாய் ஓடுகின்ற இடத்திலிருப்பதால் அப்பெயர் கொண்டது. ஐயாறன் என்றசொல் உள்ளுறைப் பொருளாய் ஐந்து புலன்களும் சேர்கின்ற இடமாகிய உயிர்க ளுடைய உள்ளத்தில் உறைகிறவன் என்ற பொருளைத்தரும்.

அடித்தலம்—அடிகளாகிய இடம். எல்லா உயிர்களும் உலகவாழ்க்கை முடிவில் பேரின்பம் நுகர்தற்குப் போய்ச்சேரும் இடம் திருவடி களாதலால் அடித்தலம் எனப்பட்டது. அடி—திருவருள். தல மாகிய அடி என மாறி வீட்டிடமாகிய திருவடிகள் எனப்பொருள் கொள்ளலாம். ஏ—ஈற்றசை.

இருள் தரு துன்பப் படலம் மறைப்ப—இருள் தரு துன்பப்படலம் மறைப்ப என்பதனை துன்பம்தரு இருட்படலம் மறைப்ப என மாற்றுக. ஆணவமலம் உலகவாழ்வில் துன்பத்தையே தருதலால் துன்பந்தரு இருட்படலம் மறைப்ப என்றார். படலம் என்பது புறப்பொருளைப் பார்க்கவொட்டாமல் கண்ணைமூடி மறைத்துக் கொண்டிருக்கும் மெல்லிய சவ்வு (film). கண்ணுக்குள் பார்வை வலி யிருந்தும் அதனை விளங்க வொட்டாமல் மூடித்தடுத்துக் கொண்டிருக்கும் படலம் போல உயிருக்கு இயல்பாய் நிறைவு அறிவு இருந்தும் அதனை விளங்கவொட்டாமல் ஆணவமலம் மறைத்துக் கொண்டிருத்தலால் இருட்படலமென்றார். இதனால் கண்ணைமூடியிருக்கிற படலமானது கண்பார்வையைக் கெடுக் காமலிருத்தல்போல உயிரின் நிறைவறிவை மறைத்திருக்கிற ஆணவமலமானது அவ்வறிவைக் கெடுக்கவில்லை என்பது பெறப் பட்டது. மறைப்ப என்பது மறைத்தலினால் என்றும் காரணப் பொருள்படநின்றது.

மெய்ஞ்ஞானம் என்னும் பொருள்—மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம் —மெய்ப்பொருளாகிய இறைவனை உள்ளத்தில் உணரும் மெய்

யுணர்வு. இந்த மெய்யுணர்வு ஞானசிரியருடைய அறிவுரையைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்களா லுண்டாகிறது. பொருட்பற்று உயிர்ப்பற்றுகளை விடுதலாலுண்டாகும் இந்த மெய்யுணர்வு ஆணவமல மறைப்பை நீக்கி உயிர்களை இறைவனுடைய திருவடிகளிற் சேர்த்துப் பேரின்பம் நுகரச் செய்கின்றது.

கண் இழந்து—கண் என்பது இங்கே அகக்கண் (ஞானக்கண்).

உண்பொருள்—என்பது வினைத்தொகை. உண்ணுதல்—நுகர்தல். உண்பொருள் என்பது ஐம்பொறிகளாலும், கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும், நுகரும் உலகப் பொருள்கள்.

புகல் இழந்த—புகல்-பற்றுக்கோடு, தஞ்சம். புகல் இழத்தல் ஆவது உயிர் தனக்குப் பற்றுவான் இறைவனே என்ற உண்மையை மறத்தல்.

குருடர்—இங்கே, இறைவனை நேரே மெய்யுணர்வினால் உணரும் அகக்கண் இல்லாதவர்.

தம்மைப் பரவு—தம்மை என்ற சொல் திருவடிகளைக் குறிக்கின்றது. பரவ என்பது காரணப்பொருளில் வந்த இறந்தகால வினையெச்சம். திருவடிகளைப் பரவுதல் என்பது பாசம் வாயிலாக அறியும் பாச ஞானத்தாலும் (உலக அறிவினாலும்) பசு ஞானத்தினாலும் (உயிரறிவினாலும்) உலகினை ஆளும் இறைவன் ஒருவன் உளன் என்று அவனுடைய பொது இயலை அறிந்து அவனது அருள் விளங்கும் நெறியாகிய அறநெறியில் ஒழுகித் துதித்தல். கடவுளினுடைய அருள் விளங்கும் அறநெறியில் ஒழுகாத கடவுட் கொள்கையரும் அருளைத் துதிக்கின்றவர் ஆகார். கடவுள் இல்லையென்று சொல்லுகிற ஆராய்ச்சிக்கண் குருடரும் அவனது அருளைத் துதிக்கின்றவர் ஆகார். இவர்கள் உய்யும் பொருட்டு அவர்களை இறைவன் துன்பத்துக்குள்ளாக்குகின்றார்.

கொடு நரகக்குழி நின்று அருள் தரு கை கொடுத்து ஏற்றும்—இது உருவகம். தானாக மேட்டுக்கு ஏறக்கூடாத ஒரு பெரிய குழியில் விழுந்து அதனை விட்டு ஏற வழிதெரியாது தடுமாறித் துன்புறுகின்ற ஒருவனை மேட்டில் நிற்கிற பிறனொருவன் தனது கைகளால் பிடித்துத் தூக்கி மேட்டில் எடுத்துவிட்டு, துன்பம் நீங்கி இன்புறச் செய்தல் போல, பிறவிப் படுகுழியில் விழுந்து தனது சிறப்பியலை உணராமையினால் அதனை விட்டு ஏற வழி தெரியாது மயங்கித் துன்புறுகின்ற உயிரை அவ்வுயிர் தனது பொது

இயல் அறிந்து துதிக்குமாறுல் இறைவன் பிறவியினின்றும் நீங்கிக் கரை ஏறுதற்கு வழிகாட்டி, காட்டப்பட்ட வழியிலே அவ்வுயிர் ஏற ஏற அதன் அறிவுக்குத் தக்கவாறு இன்பம் அடையச் செய்கின்றான் என்பது கருத்து. உலக நெறியில் உலக நுகர்வு விரும்பி ஒழுகுகின்ற ஓர் உயிர் அறநெறியில் ஒழுகுமானால் அவ்வொழுகலாற்றுக்குத் தக்கபடி இறைவன் அதனை இன்பமடையச் செய்கிறான். எந்நெறியிலும் உயிரைத் துன்பம் அடையச் செய்தல் இறைவனுடைய கருத்து அன்று. உலகில் உயிர் துன்பம் அடைதல் எற்றுக்கெனில் அத் துன்பத்துக்குக் காரணமாகிய தீவினையை இனிச் செய்யாதிருத்தற் பொருட்டு. இக் கருத்தைத் திருஞானசம்பந்த அடிகள் "மண்ணினல்லவண்ணம் வாழலாம் வைகலும்," என்று திருக்கழுமலம் தேவாரப் பதிகம் முதலாவது பாட்டிற் கூறி அருளினர்.

அருள் தரு கை—இறைவன் எப்பொழுதும் உயிர் இன்பம் அடைதல் வேண்டும் என்ற கருத்துடன் அதற்கு அருளையே செய்கின்றான் ஆதலின் அருள் தரு கை என்றார்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

"பதிஞானமே ஒரு ஆன்மாவை ஐம்புல அடிமைத் தன்மையினின்றும் விடுவிப்பதாகும்; தன்னலத்தையும் ஆடம்பரத்தையும் கெடுப்பதாகும், உலகப்பற்றை வெறுத்து வனப்பும் நன்மையும் மெய்மையும் நிறைந்த ஒரு பரம்பொருளை நாடச் செய்வதாகும்; தனக்கு நேரும் இடையூறுகளையும் ஏனைய துறைகளில் உண்டாகும் இழப்புகளையும் கருதாமல் உயர்ந்த நோக்கத்துடன் உழைக்கச் செய்வதாகும். எனவே இதுவே "சீரியர்" வாழ்க்கையாம்; மற்றைய இயல்பான வாழ்க்கை "பூரியர்" வாழ்க்கையே."

(கா. சிவ. க.) —ஆபேல் ஜே. ஜோன்ஸ்

சமயமும் தத்துவமும்:
Religion & Philosophy

திருநாவுக்கரசு நாயனர் செய்தருளிய

திருப்பூந்துருத்தித் திருமடம்

[C. K. சுப்பிரமணிய முதலியார். B A]

இவ்வுலகிலே சமய வாழ்க்கையில் மக்களை அவரவர் தகுதிப்படி அறிவுறுத்தி வழிகாட்டிப் பண்டைநாள் முதற் பற்பல சமயங்களிலும் பற்பல ஆசாரியர்கள் வெளிவந்துள்ளார்கள்.

பண்டைச் சின்னங்களின் மேன்மை

பௌத்தம், கிறித்தவம், மகமதியம் முதலியன இந்நாளிலே பெருந்தொகை மக்களாற் பின்பற்றப்படுவன. அவ்வவற்றின் ஆசாரியர்களான கௌதமபுத்தர், கிறித்துநாதர், முகமது நபி நாயகம் இவர்கள் பேராலும், இவர்களது சீடர்கள் பேராலும் பற்பல கோயில்களும், மடங்களும் உண்டு. சைவம், வைணவம் என்பன நம்நாட்டில் பண்டைக்காலந்தொட்டு வழங்கும் பெருஞ்சமயங்களாம். இவற்றிலே வழிபடப்பெறும் பற்பல சமய ஆசாரியர்கள் பேராலும் பலப்பல மடாலயங்கள் உண்டு. திருவாவடுதுறைக் கைலாய பரம்பரை ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளாதீனம், காஞ்சீபுரம் மெய்கண்ட ஆதீனம் ஞானப்பிரகாச தேசிகர் மடம், திருத்தருமபுர ஆதீனம் மதுரைத் திருஞானசம்பந்தமூர்த்தி ஆதீனம், காஞ்சீபுரம் மெய்கண்ட ஆதீனம் ஞானப்பிரகாச தேசிகர் மட', திருத்தருமபுர ஆதீனம் மதுரைத் திருஞானசம்பந்தமூர்த்தி ஆதீனம் முதலியனவும், இராமநுசர் மடம், சங்கராசாரியர் மடம் முதலியனவும் காண்க. மேலே கூறிய சமயாசாரியர்கள் தங்கள் வாழ்நாளிலே தாமாகவே செய்து தாபித்து வாழ்ந்துவந்த மடங்கள் அநேகமாய் இல்லை என்றே சொல்லலாம்.

இக்காரணத்தைக்கொண்டு பார்ப்போமானல் மேலே தலைப்பில் காட்டிய திருப்பூந்துருத்தி (தஞ்சாவூருக்குப் பக்கம் கற்சாலையில் 5 நாழிகையில் உள்ளது) யிலே உள்ள திருநாவுக்கரசு

நாயனார் திருமடமானது இவற்றிற்கெல்லாம் வேறாய்த் தனிச் சிறப்புடையதாம். என்னை? அத்திருமடம்

அப்பர் சுவாமி களது திருமடம்

சைவசமய பரமாசாரியர்கள் நால்வரில் ஒருவராய் விளங்கும் திருநாவுக்கரசு நாயனார் என்ற அப்பர் சுவாமிகள் திருப்பூந்துருத்தியிலே தங்கித் தரிசித்துத் திருத் தொண்டுகள் செய்து பலகாலம் அதில் வசித்த நாளில் இத்திருமடத்தைத் தாமே உண்டாக்கித் தாபித்து அதில் வாழ்ந்து வந்தனர்.

"அங்குறையுந் தன்மை வேண்டி நாமடி போற்றுவதென்று
பொங்கு தமிழ்ச்சொல் விருத்தம் போற்றிய பாடல் புரிந்து
தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரா னாருள் பெற்றுத்
திங்களு ஞாயிறுந் தோயுந் திருமடம் ஆங்கொன்று செய்தார்"

என்று பெரிய புராணத்தால் அறிகிறோம். அத்திருமடத்தின் நிலம் அவர்தம் திருப்பாதங்களைப் பன்னாளும் தீண்டப் பேறு பெற்றுத் தலையிற் சூட்டிக்கொண்டது. அவர்தம் திருக்கண்கள் அதனைப் பல்கால் நோக்கி பரிசுத்தமாக்கின. அவர்தம் திருக் கரங்கள் அதனைப் பன்னாளும் தீண்டிப் பரிசதீக்கை செய்தன. அவரது திருவுழவாரப்படை வைத்த இடமும், அவரது அமலமாகிய தூயதிருமேனி பள்ளிகொண்டருளிய இடமும் அதனுள் உண்டு. மேலும் அத்திருமடமும் அதனைச்சூழ்ந்த சுற்றிடமும் வாகீசத் திருவடிகளின் தூய எண்ணங்களால் தூய்மை செய்யப் பெற்றன. அந்த ஆசாரியர் பெருந்தகை இத்திருமடத்தைத் தாமே செய்வித்து இங்கே பலகாலம் வாழ்ந்தபோது தமது நீண்ட பெருவாழ்க்கையின்திறத்தையும் சிவபெருமான் தமக்குச் செய்த பெருங்கருணைத் திறத்தையும் எண்ணி எண்ணி "வார்ந்த கண்ணீர் மழை சொரிந்து" பலகாலம் இதில் வசித்தருளினர். இங்கே தங்கியிருந்த நாளில் அவர் அநேகம் அரிய தேவாரங்களை அருளியுள்ளார்.

"பல்வகைத் தாண்டகத்தோடும் பரவுந் தனித்தாண்டகமும்
அல்லலறுப்பவர் தானத்தடை வுதிருத்தாண் டகமும்
செல்கதி காட்டிடப் போற்றுந் திருவங்கமாலையும் உள்ளிட்டு
எல்லையில் பன்மைத் தொகையும் இயம்பினர் ஏத்தியிருந்தார்"

என்பது பெரிய புராணம்.

இத்திருமடத்தை உண்டாக்கி இதிலே சுவாமிகள் எழுந்தருளியிருந்த காலத்திலேதான் திருஞானசம்பந்த நாயனார் தமது பாண்டிநாட்டுயாத்திரையை முடித்துச் சமணரைவென்று

சைவத்திரு நீற்று நெறியைத் தாபித்து மீண்டுசோழவள நாட்டிற்கு எழுந்தருளியபோது திருநாவுக்கரசு சுவாமிகளைக் காணும்பொருட்டு வந்தருளினர். அந்த நற்செய்தி கேட்ட வாகீசமூர்த்திகள் ஞானத் திருமுனிவரை எதிர் கொள்ளச்சென்று வழியிலே பரிசனங்கள் 'சூழுமிடைந்திடு நெருக்கிற் காணுமே தொழுதருளி' அவரது முத்துச் சிவிகையைத் தாங்குவாருடன் தாங்கிவந்து இத்திரு மடத்திலே அவரை வரவேற்று வந்து இருத்தி இருபெருமக்களும் உடனுறைந்து தாம் திருமறைக்காட்டிலிருந்து பிரிந்த பின்னர் நிகழ்த்திய யாத்திரைகளைப்பற்றி ஒருவர் ஒருவரிற் கலந்துபேசிக் களித்தனர். அவர் சென்று தரிசித்து வந்த பாண்டி நாட்டிற்கு வாகீசரும் இவர் சென்று தரிசித்த தொண்டை நாட்டிற்கு அவருமாகப் புறப்பட்டுச் சென்றருளினர். இவ்விரண்டு பரமாசாரிய மூர்த்திகளும் கடைசி முறையாக மூன்றுவது முறை சந்தித்து அளவளாவிப் பிரியா நண்புரிமையுடன் பிரிந்த திருமடம் இதுவே. வாகீச மூர்த்திகள் தாமே செய்து தாபித்ததும், பன்னாள் வசித்ததும், வாகீசர், சம்பந்தர் என்ற இருபெரும் ஆசாரிய மூர்த்திகளும் தங்கியிருந்தருளப்பெற்றதுமாகிய பெரும்பேறு இத்திருமடத்திற்கே சிறப்புரிமையாம். சைவத்திருமுறையாலே துதிக்கப்பெற்றபெருமையுடையது இத்திருமடமாம். இத்தகைய சிறப்பு வேறு எந்த மடத்திற்குள்ளது? இத்திருமடம் திருப்பூந்துருத்தியில் ஆலயத்திற்குக் கீழ்புறம் இருக்கின்றது.

மடத்துச் சரிதம்.

இப்போது இந்த மடம் ஒரு செங்கல் குவியலாகக் காணப்பெறும். அதனுள் மனிதர்கள் சென்று பார்க்க இயலாது. வெளியிலிருந்து பார்த்தால் சில திருவாயில் நிலைகள் காணப்படுகின்றன. மேல் மாடியோ அல்லது ஒரு உயர்ந்த தளமோ இருந்ததாகத் தெரிகிறது. அவ்விடம் மரம் செடிகள் முளைந்து மனிதர் உட்புகமுடியாதபடி இருக்கிறது. சைவமக்கள் இதனை எவ்வகையினும் கவனித்ததாகத் தெரியவில்லை. இதர சமயத்தவர்களான நமது சகோதரர்களைப் பாருங்கள். முகமது நபி வாழ்ந்த மக்கா, மதினாவுக்கும் ஏசுகிறித்து வாழ்ந்து பிரசங்கித்த எரோசெலமுக்கும், கௌதமபுத்தர் தியானம் செய்த புத்த கயாவின் போதிக்கும் அந்தந்த சமயத்தவர்கள் எத்தனை ஆர்வத்துடன் தலயாத்திரை செய்துவருகிறார்கள்? அந்த இடங்களை எவ்வளவு கௌரவமாகக் காப்பாற்றி வருகிறார்கள்?

தற்கால நிலைமை

சைவர்களாகிய நாம் நமது சமயாசாரியர் தாமே செய்து தாபித்து வாழ்ந்த இந்தத் திருமடத்தை எப்படிக் காப்பாற்றி

ணவக்கிறோம்? இதைவிட வருந்தத்தக்கது வேறில்லை. இத்திரு மடத்தைச் செப்பனிட்டுப் பொன் புதைந்து வைத்தாலும் இதற்குத்தகும் என்று சொல்வேன். செப்பனிடுதல் என்றால் அந்த மடத்திற்காணும் பொருள்களை முழுவதும் அப்புறப்படுத்தி எறிந்துவிடுதலோ அல்லது முழுதும் பழையவற்றை மாற்றிப் புதிதாய்ச் செய்து விடுதலோ என்றர்த்தமல்ல. அப்படிச் செய்தல் தகாத காரியம்.

தேவாலய மடாலயத் திருப்பணி என்றால் பழைய மூர்த்தி உட்பட எல்லாவற்றையும் புதிதாய் வேறு செய்து விடுதல் என்று இந்நாளிற் பலர் எண்ணியும் செய்தும் வருகிறார்கள்.

திருப்பணி அவசியம்

அது பெருந்தவறு. பழைய அமைப்புகளைக் கலைத்தல் கூடாது. பழையகட்டிடங்களை இயன்ற வரையில் பழையபடியே வைத்துக்கொண்டு செப்பனிடுதல் வேண்டும். இந்த மடாலயத்தின் பழைய சுவர்கள் தளம்-திருவாயில்-நிலைகள் முதலியவை அப்படியே இடப்பெயர்ச்சியின்றிக் காப்பாற்றப் பெறுதல் வேண்டும். அதில் காணும் ஒவ்வொரு செங்கல் துண்டும் விலை பெற்றது; நமது ஆசாரிய மூர்த்திகளது தொடர்பினாலே புனித மாக்கப் பெற்றது. ஆதலின் அங்குக்காணும் கற்குவியலில் கிடைக்கும் ஒவ்வொரு சிறு செங்கற்றுண்டும் பொன்னேடோற் காத்தற்குரியது. அவைகளை எல்லாம் அந்தக் கட்டிடத்தை உள்ளது உள்ளவாறே செப்பனிடப் பயன் படுத்தவேண்டும். இவ்வாறு அத்திரு மடக் கட்டிடத்தைச் செப்பனிட்டு அதன் சுற்றிடத்தையும் சுத்தமாக்கி நல்வேலியிட்டு வைத்தல் வேண்டும். திருநாவுக்கரசர் திரு உருவமும் உயர்ந்த ஒரு தனியிடத்தில் அமைத்து வழிபடப் பெறுதல் வேண்டும். அதை அடுத்து திருஞானசம்பந்தநாயனார் திருவுருவத்தையும் தாபித்து வைத்தல் வேண்டும். இத்திருமடத்தை ஒவ்வோர் சைவசமயியும் தமிழனும் பெரும் யாத்திரைத் தலமாகக்கொண்டு ஒழுகுதற்குரியனாவான். இத்திரு மடத்தின் மூலம் அந்த ஆசாரியமூர்த்திகளின் உபதேசங்கள் உலகிற் பரவச் செய்யவேண்டும். இத்திருமடம் சைவத்திற்குக் கண்போன்று விளங்குதல்வேண்டும்.

இத்திருமடம் இப்போது எனது அன்பார்ந்த நண்பர் உரிமையாளர் திரு. தங்கவேல் முதலியார் அவர்கள் வசமாக உள்ளது. சைவ சமயிகள் இந்தப் பெரும் புண்ணியத்தில் ஈடு பெறுதற்கு அவர்கள் எல்லா வகையிலும் உதவி செய்வார்கள் என்று நம்புகின்றேன்.

(கோங்குமலர்)

இலக்கணமும் இலக்கியமும்:
Language & Literature

"செந்தமிழே தீர்க்க சுவா கா!"

[உயர்திரு. சுத்தானந்த பாரதியார்]

க. எழுக தமிழர்!

நல்லருட்புலவர் நக்கீரர் அன்று ஒரு மந்திரம் உருவிட்டார்- "செந்தமிழே தீர்க்கசுவா கா!". இன்று இதே மந்திரத்தை ("செந்தமிழ்ச் செல்வியே நீடு நீவாழி!" எனும் மந்திரத்தை) ஒவ்வொரு தமிழனும் உருவேற்றுங்காலம் வந்துள்ளது. நமது கடவுளன்னையின் அருளறிவுக்கொடி மேற்கும் கிழக்கும் போற்றி வணங்க உலக மொழிமன்றில் ஓங்கிப்பறக்கவேண்டும். முன்னே சிவனடியார் எழுந்து அருட்பணி புரிந்ததுபோல் இன்று தமிழடியார் எழுந்து தாய்ப்பணி புரிக! படை படையாகத் தமிழ்ப்பணியாளர் வேண்டும். மனத்திட்பமும் வினைத்திட்பமுங் கொண்டு வீறுடன் எழுக; இத்தொல்லிளந் திருவைத்தொழுக! அன்பர்களே, அரும்பணி, பெரும்பணி, தமிழுக்கு உலகில் பெருமை தரும்பணி அணியணியாக உமது ஆற்றலைக் கூவியழைக்கிறது. பேடி கை வாள்போல இத்தமிழ் நமது பெருமைக்கு அருமையான கருவியாயிருந்தும் பயனற்றதாவதா! தாழாது உழைத்தால் ஊழையும் உப்பக்கங்காணலாம்! தமிழுக்காக உங்கள் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்களை எண்ணுமின்; உறுதியோடெண்ணுமின்.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"
"வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்;
மற்றைய வெல்லாம் பிற"

தமிழீர் இன்று நமது தமிழ்ப்பணி தூங்காது செய்யும் வினை.

உ. சுற்று நோக்குக!

சுற்றுலகைப் பார்மின்! அத்லாந்திக் நாகரிகம் அலைபுரண்டு எழுந்து வீறிடுகின்றது. ஆங்கிலமும், பிரெஞ்சும், ஜர்மனியும் யாமே அருங்கலைகளுக்கு அளவுகோ லென மார்தட்டுகின்றன;

பாராள் மன்றங்களைத் தாமே யாளுகின்றன. புதுப்புதுத் துறைகளிற், புதுப்புது செல்வக்கலைகளிற் பொங்கிப் பொலிந்து தலைநிமிர்ந்து வெற்றிநடை நடக்கின்றன. தமிழ் எங்கே? உள்நாட்டில், வங்கமொழி இரவீந்திரக்குழலுவந்து, தங்கச்சதங்கை கலீரென அணிநடை பயிலுகிறது.

சுமார் ருOO ஆண்டுகளுக்கு முன்பே தலைதூக்கிய வங்க மொழிக்கு உலகில் ஒரு மதிப்புள்ளது; ஒரு இடமுள்ளது. ஹிந்தி முரசு திசையைப் பிளக்கிறது. இவ்விரண்டும் மேலைமொழிகளைப் பார்த்தும், பேர்த்தும், போர்த்தும் விரைவாக முன்னேறி உலக மொழி மன்றில் உரிய இடம் பெற்றுவிட்டன. மன்னர் புன்னகையில் கன்னடமும் மலையாளமும் முன்னேறுகின்றன. தெலுங்கு புதுநயம் குலுங்குகிறது. சுற்றும் வெற்றிமுரசம்; பேர்கலைப்புரட்சியின் ஆர்கலி. இவற்றிடையே இறைவனுடனறிவு மொழி பேசுதமிழெங்கே! அமுதத்தமிழின் அருள்யாழெங்கே! காலக்கற்பகம் கோலத் திருமலர் குலுங்குகிறது; பழங்கனி குலுங்கும் இளந்தமிழ் இன்று மலடானதோ! இந்நிறை மொழிக்கு, அருட்புலவர் வாய்தவழ்ந்த மறை மொழிக்கு, வெளியுலகில் எவ்வளவு மதிப்புள்ளது? எல்லையற்ற பரம்பொருள் போல் என்றுமுள்ள இவ்வருள்மொழி வேங்கடத்திற்கும் குமரிக்கு மிடையே எத்தனை நாள் அடைபட்டிருப்பது?

"வேந்தரெலாம் போற்றுகலை வெற்றிச்செங் கோல்பிடித்த
தீந்தமிழே தீர்க்கசுவா கா"

ரு. அக்காலம்

அக்காலம் முத்தமிழரசி வித்தகர் வணங்க சங்கப்பலகையில் வீற்று அறிவுச் செங்கோல் தாங்கினாள்; சேரசோழபாண்டிய மன்னரின் அன்புத்திறையை வாங்கினாள். தனது இனிமையால் இறைவனை மனங் கனிவித்தாள். கண்ணுதற் பெருங் கடவுளும் அவள் கழகத்திருந்து பண்ணுராய்ந்தான். சுமார் கூOOO ஆண்டுகட்குமுன்பே, இலக்கணவரம்பில் இலக்கியப்பயிர் வளர்த்து உலகிற்கு ஏராளமான செவிவிருந்தளித்தாள்; தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்தாள்; முதலையுண்டபாலனை யழைத்தாள்; எலும்பைப் பூம்பாவையாக்கினாள்; மறைக்கதவைத் திறந்தாள்; கல்லைக் கலமாக்கினாள்; நீர்த்துறையை இளங்காற்றெனக் குளிர்

வித்தாள்; நஞ்சை யமுதாக்கினள்; வெறி கொண்ட யானையும் தன் சொல்முன் வணங்கச் செய்தாள்; அரவு கடித்திறந்தவனை எழுப்பினுள்; பாண்டியன் வெப்பை நீற்றுப் பதிகத்தாற் போக்கினுள்; சூலையை மாற்றினுள்; எரியையும் வெள்ளத்தையும் எதிர்வாதங்களையும், பகைவர் துன்பங்களையும் எதிர்த்து வென்றாள். அப்பர், அழகர், முத்தமிழ்விரகர், மணிமொழியார், சேக்கிழார், அருணகிரியார், தாயுமானுர், வள்ளலார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஔவை, ஆண்டாள், காரைக்காலம்மையார் போன்ற பெரியார் திருநாவுகளில் தனது மந்திரத்திறனை விளக்கினுள்!

இன்ப மாகு மிறைவன் புதல்வி
　　இனிமை யென்னு மிளந்திருச் செல்வி
முன்பு முப்பெருஞ் சங்க முதல்வி
　　முத்து முத்தெனு முத்தமிழ் வாணி
தென் பரவை திருப்புக ழார்க்கத்
　　திக்கெ லாமிசை மிக்கச் சிறந்தாள்
அன்ப ருளறி வின்ப வரசி
　　யன்னை வாழி யருந்தமிழ்த் தேவி!

ச. இக்காலம்

தாயே உனது சொல் மந்திரம்; அன்று எலும்பைப் பெண்ணாக்கினை; இன்று ஆற்றலும் வீறுமழிந்து சாம்பிக்கிடக்கும் இக்காலப்-பெண்ணை உன்னருளறிவிலங்கும் கோலத்திருவடிவாக்கு; அன்று இறந்தவனை எழுப்பினை; இன்று உணர் விழந்த மாந்தரைச் சுறீரெனத் தமிழுணர்வுகொண்டெழச் செய். அன்று மறைக்கதவைத் திறந்தாய்; இன்று உன் மைந்தரின் மனக்கதவைத் திற. அன்று பாம்பின் நஞ்சை மாற்றினை; இன்று உன் மகாரைத் தீண்டிய பிறமொழி வீம்பை மாற்றியருள். தாயே அன்று நின் சொல்வளஞ் செழித்த இடமெல்லாம் கோயிலானது. இன்று நின் கோயில்களில் நினது பொன்மணிச் சொல் உறங்குவதேன்? தமிழே நின் அருள்வாய் மலர்ந்தருள்! நின் மைந்தர் நிலைக்கு இரங்கியருள். நின் பழமையையே பேசும் கிளிப் பிள்ளைகள் உனக்குப் புது நயம் தேடுவதில்லை. சிலர் புதுமயக்கில் விழுந்து பழைமையைப் பழிக்கின்றனர்; தமது மனையில், தாயின் பெருமையறியார் பிறர்மொழி பேசித் தமிழ்மொழி மறப்பர்.

தனிச் செங்கோற் செல்வியே, நின்னிசை உறங்கலாமா? ஒரு புறம் ஓரே 'கும்பகர்ணசமாதி'; பேச்சுமூச்சிலாது, சிந்தனை யில்லாது, உணர்வில்லாது, வந்தோம், இருந்தோம், உண்டோம், உறங்கினேம், கூடினேம், ஈன்றேம், மாண்டோம் என்னும் பெரும்பாலார்; மறுபுறம் கூட்டங்கூடுவர், பேசுவர், கைவீசுவர், விருந்துண்பர், நகைப்பர்—பிறகு அவர்கள் ஆர்வம் வெந்நீர்போல ஆறிப்போம்; மற்றொருபால் இத்தமிழில் என்ன இருக்கிற தென்று ஆங்கிலச் செருக்கு நீங்காது அளப்பவர்; மற்றொரு புறம் கொச்சைபேசி, நின்னை எளிமைப் படுத்துவோர். தமிழின் பெயரால் தமிழைக் கெடுப்போர் எத்தனை? இவர்களை நோக்கியே

"பல்சான் றீரே, பல் சான் றீரே
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லார்க்கு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா றதுவே"

என்றுரைப்பாயாக.

பார்ப்பனர் வீட்டில் பேசுவது போலவே தாள்களிலும், சுவடிகளிலும் எழுதுவதே இளந்தமிழ், எளிய தமிழ், என்பார் ஒருபால்; தமிழைப் புதுக்குகிறார்களாம் !!!

"ஆன்றோர் அருட்புலவர் அன்புப் பெருக்கில்வளர்
தேன்றமிழே தீர்க்க சுவாகா!

என்று இவர்களை நோக்கி ஒரு தீர்க்க சுவாகா போடுவோம்!

(தொடரும்)

தமிழகம்

[திரு. S. நடராஜன் அவர்கள், B A.]

தமிழரின் தனிச் சிறப்பு

(முன் ௩௫௪-ம் பக்கத் தொடர்ச்சி)

39. தலைச்சங்க காலத்துக்கு முன்னரே தமிழரின் நாகரிகம் தலைசிறந்து விளங்கிற்றென்றால் அதன் பெருமையை யாரே கணக்கிட வல்லார். தமிழர் உலகியற்றுறை, ஆன்ம உணர்ச்சித் துறைகளில் தலைசிறந்த நாகரிகம் பெற்று, நாகரிக ஒளியைப் பிற நாடு

களில் பரப்பினர். அவர்களின் தனிப் பெருமை, இறை வழிபாடும், இன்னுயிரைத் தன்னுயிராய்க் கருதும் செம்மையு மேயாம். உலகியற்றுறையில் தமிழர் வல்லுநர் என்பது "வள்ளு வன் தன்னை உலகினுக்கே *தந்து வான்புகழ் கொண்டமையால்" பெறப்படும். அன்னோர் ஆன்ம உணர்ச்சியையே (Spiritual civilisation) குறிக்கோளாகக் கொண்டனரென்பது பின் வரு மவற்றால் பெறப்படும்.

'கொள்ளேன் புரந்தரன் மாலயன், வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே.''

—திருவாசகம்

"தந்தையார், தாயாருடன் பிறந்தார், தாரமார்,
புத்திரரார் தாந் தாமாரே,
வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமாமிதற்
கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக்கேண்மின் திகழ்
மதியும்வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாயஎன்
றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே.''

—அப்பர் தேவாரம்

"பூதமைந்து நிலையிற் கலங்கினு
மாதொர் பாகர் மலர்த்தாண் மறப்பிலா
ரோது காதலுறைப்பி னெறி நின்றார்
கோதிலாத குணப் பெருங் குன்றனார்.''
"கேடு மாக்கமுங் கெட்ட திருவின
ரோடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.''

"இறவாத வின்பவன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டுமீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவாநீயாடும்போ துன்னடியின் கீழிருக்க வென்றார்.''

—சேக்கிழார்

---

* திருக்குறள் உலகில் உள்ள எல்லா முன்னேற்றமடைந் துள்ள மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட் டுள்ளமையைக் கவி சுட்டு கிறார்.

"கலையெலா முணர்ந்தானேனுங் கரிசறத் தெளிந்தானேனு
மலையென வுயர்ந்தானேனு மனமய லகன்றானேனு
முலகெலாம் புகழப்பல்லோர்க் குதவிய கையனேனு
மிலகிய விரக்கமின்றே லெழுநர கடைவனன்றே."

—கந்தபுராணம்

"சதுர்மறை யாரியம் வருமுன் சகம்முழுதும் நினதாயின்
முதுமொழி நீஅநாதியென மொழிகுவதும் வியப்பாமே."
"கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையா ருன்வாசகத்தில் ஒருபிரதி கருதினதே."

—மனோன்மணீயம்

"சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே."
"தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே." —பாரதியார்

தமிழ்மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ, திரு. தியாகராயன் அவர்கள்]

(முன் ௩௨௩-ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தோசைகளை இவ்வாறு குறிப்பது போதும் என்பதற்கு அத்தாட்சியாக, ஆங்கிலத்தில் சீனிவாச ஐயங்கார் எழுதிய ஓர் விஷயத்தை, இப்புத்தொலிகளுடனும், இக்குறியினுடனும் கீழே தமிழில் எழுதிக் காட்டப்பட்டிருக்கிறது:—

த·ஸ் தி· ஸ்டேட்மெண்ட் ஆவ்· சிவஞான சுவாமி தெ·ட் "தொல்லாசிரியர் வழக்கே பிற்காலத்து வேறுபட வழங்கப்படு மாயின் அவ்வழக்கு இலக்கணத்தோடு பொருந்தாதென விலக்குக" இச். நாட் ஒன்லி அன்சயன்டிவி·க் ப·ட் ஆல்ஸோ இன் ஆப்ஸ்டினேட் க்ளிங்கிங் டு தெ·ட் ஒல்ட். ஸ¬பர்ஸ்டிஷன் வி·ச் பி·லீவ்ட்· தி· ஏன்ஷியன்ட்ஸ் டு ஹாவ் டிஸ்·கவர்ட் ஆல் விச்·டம்.

(Thus the statement of Sivagnana Swami that தொல்லாசிரியர் வழக்கே பிற்காலத்து வேறுபட வழங்கப்படு மாயின், அவ்வழக்கு இலக்கணத்தொடு பொருந்தாதென விலக்குக is not only unscientific but also an obstinate

clinging to that old superstition which believed the ancients to have discovered all wisdom.

(Tamil Studies)

Note:—மேலே கோடுள்ள எழுத்துக்களை சேர்த்தொலிக்க வேண்டும்.)

An என்பதை 'இன்' என குற்றிகர குறி கொடுத்தெழு தப்பட்டது. இக்குற்றிய லிகரம் Sad, Nad, என்னும் மொழி களிலுள்ள A போல் உச்சரிப்பதென முன்னம் காட்டினேன்.

இவ்வாறு இப்புத் தோசைகளைப் புகுப்பதால் தமிழில் அதிக ஒலிகளும் எழுத்துக்களும் உண்டாகுமென்னும் ஐயம் வேண்டாம்.

தமிழ் மெய்யெழுத்துக்கள் 18-ல் ண, ன, ள, ற, ழ, ஞ என்னுஞ் சிறப்பெழுத்துக்களையும் மிகைப்பட்ட வெழுத்துக் களையும் நீக்க மீதி 12 எழுத்துக்களே உள்ளன. இவைகளுடன் வடமொழியிலிருந்து எடுத்துக்கொண்ட ஜ, ஸ, ஷ, ஹ என்னும் நான்கு எழுத்துக்களையும், புதிதாகப் புகுக்கும் ப', ட', த', க', ச', ழ', வ', என்னும் ஏழு எழுத்துக்களையுஞ் சேர்க்க மொத்தம் 23 எழுத்துக்களாகும்.

Pitman's Shorthand Instructor என்னும் நூலில் இந்த 23 ஒலிகளுடன் W என்பதையுஞ் சேர்த்து 24 மெய் யொலிகளை கொடுத்திருப்பதையும் காண்க.

மேற்கூறிய இவ்வேழும் புத்தோசைகளெனக் கொள்ளக் கூடாது. ஏனெனில் க, ச, ட, த, ப, என்பவைகளின் மெல் லொலிகள் தமிழ் மொழியில் உள்ளதாக முன்னம் எடுத்துக் காட்டினேன். எனவே ஆங்கிலத்தைத் தமிழில் ஒலிக்க மூன்று மெய்யொலிகளே அவசியம். அதாவது ழ., za as in azure, vision, வ' fa, ச. as in is, dogs.

இவ்வாறு 3 புதிய எழுத்துக்களால் வேற்று மொழியின் ஒலிகளைத் தமிழில் குறிப்பது மிகையாகாது. அன்றியும் இவ் வெழுத்துக்களும் ஆங்கிலம் அல்லது வடமொழியின் சொற் களைத் தமிழில் எழுதுவதற்கே கையாளப்படும். இத்தன்மையால் இச்சொற்கள் திசை மொழிகளென்பதைத் தாமே குறிக்கும்.

இவ்வாறு இவ்வெழுத்துக்களைத் தமிழில் புகுப்பதால் தமிழ் மொழி மேலுஞ் சிறந்து விளங்கும்.

இலக்கணம்

தமிழ் இலக்கணத்தின்படி சிற்சில வெழுத்துக்களே மொழி முதலிடைகடைகளில் வருமென விதிகளுண்டு. இப்புது மொழியையும் அதற்கேற்ற புத்தோசைகளையும் தமிழில் புகுப்பதானல் மேற்கூறிய விதிகளுக்கு முரண்படும்; எனவே இலக்கணம் வல்லோர் ஆராய்ந்து இவற்றிற்கேற்ற விதிகள் அமைக்க வேண்டும்.

தமிழில் வெகுவாக இரண்டிற்கு மேற்பட்ட மெய்கள் சேர்ந்தொலியா. ஆங்கிலத்தில் அவ்வாறு ஒலிக்கும்.

முன்பு N என்னும் ஆங்கிலவொலிக்கு இணையாகத் தங்ககரத்தைக் குறிக்கப்பட் டிருப்பினும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களால் எழுதுங்கால் டண்ணகர றன்னகரங்களையும் நம் இலக்கணத்திற்கேற்ப உபயோகப் படுத்துவது தவறாகாது. உதாரணம் ஸ்டேட்மெண்ட், மன்ரோ (Munro) ப்ரௌன் Brown.

கல்லாதவர்

(1) கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். (குறள் 393)

(2) உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லாதவர். (குறள் 395)

(3) உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். (குறள் 406)

(1) கண்ணுடைய ரென்று உயர்த்துச் சொல்லப்படுவோர் கற்றவரே, மற்றைக், கல்லாதவர் முகத்தின் கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர்.

(2) "பிற்றைநிலை முனியாது கற்றல் நன்று" ஆதலினால், செல்வர் முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்று நின்றுங் கற்றார் தலையாயினார், அங்ஙிலைக்கு நாணிக்கல்லாதவர் எஞ்ஞான்று மிழிந்தாரே யாவர்.

(3) கல்லாதவர், காணப்படுதலான் இலரல்லர், உளரென்று சிலர் சொல்லுமளவினராத லன்றி, தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால், விளையாத களர் நிலத்தோ டொப்பர்.

ஓத்தி-எம். முனுசாமி ஆச்சாரி.

மாணவர் பகுதி

ஔவையாரின் அமுதமொழிகள்

ஒற்றுமை நலம்

[திரு. சேலே. சகாதேவமுதலியார் அவர்கள்.]

ஒற்றுமை யென்னும் சிறந்த மனநலம் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் தலைசிறந்து விளங்குவதைக் காதாலும் கேட்கின்றோம், கண்ணாலும் பார்க்கின்றோம். ஏனைய கண்டங்களிலும் இவ்வொற்றுமை வரவர வளர்ச்சிபெற்றே வருகின்றது. பெருங் கண்டமாகிய ஆசியாவின்கண்ணுள்ள சிறியதொரு கண்டம் போன்ற நமது இந்தியாவின்கண், ஒற்றுமை நலத்தை வளர்க்கக் கூடிய மனப்பான்மைகளினும் அதனைக் குன்றச் செய்யத்தக்க ஏதுக்களே மக்கள் மனத்தின்கண் மலிந்துகிடக்கின்றன. 'சாதி இரண்டொழிய வேறில்லை... இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்...' என்று ஔவையார் வாக்கு பறையறைவிக்கவும், அச்சாதி பேதமானது பொதுவாக நமது நாடெங்கும், சிறப்பாக நமது தென்னிந்தியாவிலும் நாட்டின் பற்பல துறை வளர்ச்சிகளைக் கீழறுத்துக்கொண்டு வேர்ப்புழுவாக மக்களினிடையில் பலப்பல வேறுபாடுகளை விளைவித்துக்கொண்டிருக்கிறது. இதனையடுத்து, அச்சாதி வேறுபாடுகளைப் பின்னும் பெருக்க நாட்டிற்குள் ஒன்றின் பின் ஒன்றாக, ஒன்றிற்கு மேற்பட்ட பற்பல மதங்கள் நிறுவப்பட்டு, அவைகளுக்குள் உட்சமயங்களெனவும், புறச்சமயங்களெனவும் உட்புறச் சமயங்களெனவும் பெருகிப் பெருகித் தேசத்தில் மக்களுக்குள் ஒன்றுமையே ஓங்கி வளரச்செய்தன. இவ்வொற்றுமை யின்மை காரணமாகவே வெளிநாட்டு அரசாட்சிகளும், அவர்தம் மதங்களும் போராட்டஞ் சிறிதுமின்றிப் புகுந்துகொள்ளலாயின. 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு......நல்லறமும் நட்பும் நன்றென்றிரு......' என்று முழங்கும் மறைமொழியை மக்கள் மறந்தேவிட்டனர். இன்னும் மக்களுக்குள் மலிந்துகிடக்கும் சின்னஞ்சிறு வேறுபாடுகள் எண்ணுக்கடங்கா. அவைகளையெல்லா மெடுத்துக் காட்டுவதற் கிங்கிடமின்று. அவைகளை யெல்லாம் வேரோடு களையப் பொது மக்களிடம் அறிவு புலப்பட வேண்டும்,

அவ்வறிவு புலப்படுவதற்கு அடிப்பீடமாகிய கல்வி அவர்கட்குப் போதுமானவளவாயினும் பொருந்தியிருக்கவேண்டும். பொது மக்களின் கல்வியறிவைப் பற்றி அரசாங்கப் பணியில் அமர்ந்துள்ள கல்வியறிவாளர்களாகிய நமது மக்கட்கு அக்கரை யிருப்பதாக எவ்வகையிலும் புலப்படவில்லை. இப்போதைய அரசாட்சி நிலையில் ஏழைமக்கள் கல்வியிற் போதுமான புலமை யடைவதற்காவது வழிகள் இருப்பதாகக் காணப்படவில்லை. இதனை அறிந்து கொள்வதற்கு வேறு கரி வேண்டா; நாட்டுப்புறக் காட்சியே சாலும். மற்றும் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் முதலாம் மொழி யென்றும், தமிழ் முதலிய நமது நாட்டுமொழிகள் இரண்டாவதானவை யென்றும் ஏற்பாடு செய்திருப்பது தன்மரியாதையின் பாற்படுமோ!

ஒற்றுமை நலமானது உறையும் வீட்டின் முளைத்து, ஊரின் வளர்ந்து, நாட்டிற் பூத்து, தேசத்திற் காய்த்து, உலகத்திற் பழுக்க வேண்டும். இம்முறைபற்றி ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய சிறு நூல்களின்கண் பேருண்மைகளைப் பெய்துவைத்து, பொது மக்கட்கு அறிவு புகட்டிய முதுமைப்பிராட்டியின் மூதறிவினை என்னென்பேம்!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை
தந்தைசொன் மிக்க மந்திர மில்லை
தந்தை தாய்ப் பேண்
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

இவ்வாக்குக்கள் குடும்ப ஒற்றுமையைக் குறிக்கும். முதன்முதல் தாய் தந்தை தன் முன்னுவாருடன் ஒருவன் அன்பும் பணிவுங் கொண்டு ஒற்றுமைப்பட்டிருக்கவேண்டும். இவ்வொற்றுமைப் பண்பு வரவர வளர்ந்து அடுத்த சுற்றத்தார்மாட்டுச் செல்லும்.

நட்பேல் வளை
குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்

இவை சுற்றத்தாருடன் ஒற்றுமைப்பட்டு ஒருங்கு கூடியிருக்க வேண்டுமென்பதைக் குறிக்கும். இச்சுற்ற ஒற்றுமைப்பண்பு நாளடைவில் ஊராருடன் கூடிவாழ முயலுந் தன்மையைக் கொடுக்கும்.

ஊருடன் கூடிவாழ்
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

இவை ஊருடன் கூடிப் பகையற்று ஒத்து வாழவேண்டுமென் பதைக் குறிக்கும். இவ்வூரொற்றுமைப்பண்பானது நாளேற வேற ஒருவனைத் தன்னுட்டாரிடை நாடச்செய்யும்.

நாடொப் பனசெய்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.

இவை ஒருவன் தன்னுட்டினரிடை ஒற்றுமைப்பட்டுச் சேர்ந்து வாழும் நன்மையைக் குறிக்கும். இந்நாட்டொற்றுமை படிப்படி யாய்த் தேச ஒற்றுமைக்கு வழிகாட்டும்.

தேசத்தோ டொத்துவாழ்

இஃது ஒருவன் தன் தேசத்தாரோடெல்லாம் ஒத்து வாழவேண்டு மென்பதைக் குறிக்கும். இத்தேச ஒற்றுமை காலஞ் செல்லச் செல்ல உலக ஒற்றுமைக்கே ஒருப்படச் செய்யும்.

கிழமைப் படவாழ்
மாற்றுனுக் கிடங்கொடேல்
பையச்சென்றால் வையந் தாங்கும்

இவை, ஒருவன் தனக்கென வாழாது பிறர்க்கென வாழவேண்டு மென்பதையும், பகைவர் என்னும் பெயரையே ஒழிக்கவேண்டு மென்பதையும், அவ்வாறே போர் என்பதனுக் கிடங்கொடாமல் உலக உயிரெல்லாம் ஒருயிரெனவே மதிக்கவேண்டுமென்பதை யும், எல்லாக் காரியங்களையும் ஆரவாரமின்றி பயமும் நயமுங் கொண்டு நடத்தவேண்டு மென்பதையும், இவ்வாறெல்லாம் உணர்ந்து ஊக்கத்தைக் கைக்கொள்பவனே உலகத்தைத் தாங்கும் பெருமையையுடையவனுவான் என்பதையும் குறிக்கும்.

இளமையிலேயே இவ்வுண்மைகளெல்லாம் பொதுமக்கள் மனத்திற் பதியவைக்க வேண்டு மென்றே இச்சிறு வாக்கியங்கள் எழுந்தன. மக்கட்குள் ஒற்றுமை யுண்டாக்குவதற்கு இச்சிறு வாக்கியங்கள் போதாவோ? இதற்காக இன்னும் புராணகாவியங் கள் கற்கவேண்டுமோ? ஒற்றுமையைப்பற்றி அயல்நாட்டார் எழுதியுள்ள பெரியபெரிய மட்டற்ற புத்தகங்களையெல்லாம் வாங்கிப் படிக்கவேண்டுமோ! இச்சிறு நூல்களிலுள்ள வாக்கியங் களையே யறியாதோரும், அறிந்தும் பொருள் தெரியாதோருமாகிய

பொதுமக்கள் நமது தமிழ் நாட்டில் எண்ணிக்கைக் கடங்காமல் எத்தனை பேருளர்!

நாட்டுப்புறங்களிற் குக்கிராமங்களிலும் இலவசமாக ஆண் பெண் பிள்ளைகள் கல்வி பயிலப் பள்ளிக்கூடங்களை நிலைபெறச் செய்து, அவைகளில், அவ்வவ்விடங்களில் வழங்கிவரும் மொழி களையே முறையாகப் பன்னிரண்டு வயதுவரையிற் பிள்ளைகளைப் படிக்கச் செய்து பிறகு ஆங்கிலம் போன்ற அயல் மொழிகளை அப்பிள்ளைகட்குக் கற்பிக்கவேண்டும். பள்ளிக்கூடம் இல்லாத ஊரே நாட்டின்கண் காண்பதற்கு அருமையா யிருக்கவேண்டும். இத்தனை பிள்ளைகள் இருந்தால்தான் பள்ளிக்கூடம் வைக்கவேண்டு மென்கிற நியதி கூடவே கூடாது. இப்போதுள்ள கிராமப் பள்ளிக்கூட அமைப்பும், பாட ஒழுங்கும் மொழிபயில்வதற்கு ஒவ்வாதனவே யாகும். இதனைப்பற்றி இன்னொருமுறை எழுது வோம். மேற்காட்டியவாறு பொதுமக்களறிவு வளர்ச்சியடையு மாயின், சாதி மதம் முதலியவற்றால் நம் நாட்டின்கண் மலிந்து கிடக்கும் பிரிவினைகளெல்லா மொழிந்து, ஒற்றுமையாகிய நற் றவமே சிறந்தோங்கி, அயல்நாட்டார் மதிப்புக்கு ஆளாகி மனநலம் பெற்று மகிழ்ந்து வாழ்வோம்.

பயனுள்ள கல்வி

[சுவாமி விபுலாநந்தர் அவர்கள்]

திருநலங் கெழுமிய தனவணிக நாட்டினின்று வெளிவருஞ் செவ்விய வாரப்பதிப்பாகிய "குமரன்" என்னும் இதழகத்துப் "பயனற்றகல்வி" என்னுந் தலைப்பெயர்க்கீழ் ஒரு கட்டுரையினை யெழுதி வெளியிட்டனம். ஆங்கதனைக் கண்ணுற்ற எமது அரிய நண்பரொருவர் ஈங்கிக் கட்டுரையை எழுதித் தருமாறு பலகால் எம்மை ஊக்கினர். கலைவளர்ச்சியிற் பெரிதும் ஈடுபட்டவராத லினல், எம்மை ஊக்கியதோடமையாது ஒன்றிரண்டு தந்திச் செய்தியும் உய்த்து வற்புறுத்துவாராயினர். நட்புரிமைக்கு ஏதம் வருமென்றஞ்சி ஒருவாறிதனை எழுதத் துணிந்தனம். முன்னர்க் கட்டுரையிலே, எதிர்மறை முகத்தால் விலக்குவ விவையென வகுத்துக்காட்ட முயன்றேமாதலின், விதிமுறைமுகத்தாற்

கொள்வ திவையெனக் கூறுங் கடப்பாடும் எமக்கே யுரியதெனக் கொண்டு எம்மை இச்செயன்மேலூக்கியது எமது நண்பர்க்குப் பெரிதுந் தகவுடையதே; ஆயினும் இதனைச் செவ்விதின் ஆராய்ந்து அறிவுடையோர் உவக்குமுறையி லெழுதற்கு வேண்டிய அவகாசமின்மைக்குப் பெரிதுங் கவல்கின்றாம்.

கல்வியோ கரையற்றது; கற்பவரோ சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவின் மாந்தர்; ஆதலின் கற்கப்படு நூல்களிவையெனவும், அவற்றைக் கற்குமாறு இதுவெனவும், கற்றதனாலெய்தும் பயனிதுவெனவும் வல்லார்வாய்க் கேட்டுணர்ந்து, கற்றற் குரிய காலத்திற் கற்கப்படுபவற்றைக் கற்று, நெறி நின்று, நலனெய்தும் மாந்தரே வாழ்க்கைப்பயனை யடைந்தோராவார். "யாதானு நாடாமா லூராமா லென்னொருவன், சாந்துணையுங் கல்லாத வாறு" என ஆசிரியர் கூறினாரேனும், பள்ளிக்கல்விக்கு ஒரு காலவரையறை யுண்டு; அது நிரம்பிய பின்னர் வாழ்க்கையி லெய்தற்பால நலன்கள் வேறு பலவுள வாகலின்.

ஆடவர் மகளிராகிய இருபாலரையும் ஐயாண்டு நிரம்பிய பின்றைப் பள்ளிக்கு வைத்தல் பண்டையோர் கண்ட மரபு; மகளிர் ஏழாண்டு கல்வி பயின்று பன்னிரண்டு பிராயம் புக்கபின்னர்த் தாம் பயிலுதற்குரிய பள்ளிக்கல்வி நிரம்பியவராய் இற்செறிந்திருத்தலும் ஆடவர் பதினோராண்டு பயின்று எண்ணீராண்டு நிரம்பிய பின்னர்ப் போர்த்தொழில் முதலிய பிறதொழின் மேற் செல்லுதலும் அக்காலத்து வழக்கமென எண்ணுதற் கிடமுண்டு.

நாடக மகளிர்க்குப் பயிற்றப் படுவன ஆடலும், பாடலும், அழகு மென்னும் மூன்றுமாம். இதனை,

> "ஆடலும் பாடலு மழகு மென்னக்
> கூறிய மூன்றி னொன்றுகுறை படாம
> லேழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
> சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி"

என இளங்கோவடிகள் கூறியதனானுணர்க.

> "வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
> கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்
> பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலும்
> தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங்
> கந்துகக் கருத்து மடைநூற் செய்தியும்

சுந்தரச் சுண்ணமும் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமும்
காயக் கரணமுங் கண்ணிய துணர்தலும்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங்
கோலங் கோடலுங் கோவையின் கோப்பும்
காலக் கணிதமுங் கலைகளின் றுணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை"

எனச் சீத்தலைச் சாத்தனார் கூறிய வாற்றால் ஆடல், பாடல், அழகு எனத்தொகுத்துக் கூறிய மூன்று துறைகளின் விரிவு இவையென உணர்க.

பதினாறாட்டைப் பிராயம் புக்குக் கல்வி நிறைவுற்ற ஆடவ ரிடத்துக் காணப்படுஞ் சிறப்பியல்புகள் நான்கு எனத் தொகுத் துக் கூறப்பட்டன. இவற்றை

"கலையின தகலமுங் காட்சிக் கின்பமுஞ்
சிலையின தகலமும் வீணைச் செல்வமும்
மலையினி னகலிய மார்ப னல்லதிவ்
வுலகினி லிலையென வொருவ னுயினான்"

எனத் திருத்தக்கதேவர் உரைத்தவற்றைக் கொண்டுணர்க. சீவக நம்பி கலைநிரப்பிக் கண்டோர் விரும்பும் அழகெய்தி உடற்பயிற் சியா லகன்று விளங்கிய மார்பனாய் வில்வித்தை கைவரப் பெற்று இசைப்பயிற்சி யுடையோனாகித் திகழ்ந்தானென மேலைச் செய் யுளா லறிகின்றாம்.

இருபாலார்க்கும் வகுத்துக் கூறிய கல்விமுறை யனைத் தினையும் உடற்பயிற்சி, உளப் பயிற்சி, இசைப்பயிற்சி எனமுத் திறப் படுத்திக் கூறுதல் கூடும்.

யவனபுரத்துப் பேராசிரியராகிய "பிளேத்தோ" (Plato) என்பவரும் கல்வி முறையினை இங்ஙனம் முத்திறப்படுத்தியே கூறினார். இப்பெரியாரது பெயராகிய "பிளேத்தோ" என்னும் யவனமொழி "அகன்றமார்பன்" எனப் பொருடந்து நிற்றலையும் நோக்குக. வீரமாபுரம் எனப் பழைய யவன ஆசிரியர்களாலே போற்றப் பட்ட "ஸ்பார்ட்டா" (Sparta)என்னும் நாட்டிலே வாழ்ந்த அறநூற் பேராசிரியராகிய "லிக்கர்கஸ்" (Lycurgus) என்னும் பெரியார் இசைப்பயிற்சியை யொழித்து ஏனைய இரண் டினையுங் கைக்கொண்டார்.

உதயணகுமாரனும் சீவகநம்பியும் ஆளுடைய பிள்ளையாரும், வாகீசப் பெருந்தகையாரும் இசையில் வல்லுநரா யிருந்தன ரெனத் தமிழாசிரியர் கூறினாரேனும் ஏனைய இரண்டினையும் போல இசைப்பயிற்சியை அத்துணைச் சிறப்பினதாகக் கொண்டா ரென்று எண்ணுதற் கிடமில்லை.

இங்ஙனம் ஆராய்வுழி, "பயனுள்ள கல்வி' இருதுறைப் படுமெனவும் அவைதாம் உடற்பயிற்சியும் உளப்பயிற்சியு மாமெனவும் அறிகின்றாம். இவை ஒன்றினோடொன்று தொடர் புடையன. "உள்ளத்துறுதி உடலுறுதிக் கண்ணது" (Mens sana in corpore sans) எனும் மேனாட்டு ஆசிரியர்கூற்று ஈண்டு நோக்கற்பாலது. தூங்காமை, கல்வி, துணிவுடைமையென நிலனாள்பவர்க்கு வகுத்துக் கூறிய மூன்றனு ளிரண்டு உள்ளத் துறுதியினோடு உடலுறுதியினையுஞ் சார்ந்து நிற்பன.

ஆண்மை யென்பது ஆளுந்தன்மை யாதலானும், பெண்மை யென்பது விரும்புந் தன்மை யாதலானும் நிலனாள்பவர்க்கும் நாடகமகளிர்க்கும் வகுத்துக் கூறிய கல்விமுறை எல்லா ஆட வர்க்கும் மகளிர்க்கும் ஏற்புடைய தென்ப தொருதலை. திரு வள்ளுவநாயனாரும் "கல்வி" யென்னும் அதிகாரத்தினை அரசிய லுள் "இறைமாட்சி"யை யடுத்துநிற்கவைத்து நூலியற்றினர். ஆளுந் தன்மை யாகிய ஆண்மையை வளர்த்தற் குரிய உடற் பயிற்சியும் உளப்பயிற்சியும் இவையெனத் தெளிந்து ஆண் மக்களைப் பயிற்றுதலும், விரும்புந் தன்மையதாகிய பெண்மையை வளர்த்தற்குரிய உடற்பயிற்சியுட் உளப் பயிற்சியும் இவையெனத் தெளிந்து பெண்மக்களைப் பயிற்றுதலும் உண்மைக் கல்வி பயிற்றுதலாகும்.

முதலில் உளப்பயிற்சியை யாராய்வோம்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ் விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்றாராகலின், எண்ணும் எழுத்தும் அனைவர்க்கும் பொதுவா கிய உளப் பயிற்சிப் பாலவாமென்றறிக. இனிக் கற்றோரெனப் படுவார் தேயமிடையிட்டவும் காலமிடை யிட்டவும் காணும் ஞானக்கண்ணுடையார் என்றமையின் வேற்றுத்தேயங்களி னியல்பைத் தங்நாட்டியல்பினொடு ஒட்டி யுணர்தற்குக் கருவி யாகிய புவியியல்நூலும் (பூகோளசாஸ்திரம்), இறந்த காலத்து நிகழ்ச்சிகளை நிகழ்காலத்தோடு ஒப்பிட்டு நோக்கி எதிர்காலத் தின் நீர்மையைக் கண்டறிதற்குக் கருவியாகிய வரன்முறை நூலும் (தேசசரித்திரம்; இதிகாசம்) உளப்பயிற்சிக்கு இன்றி யமையாது வேண்டப் படுவன. இவற்றின் விரிவெல்லாம் பின் னர்க் கூறுதும்.　　(தொடரும்)

அருஞ் செய்யுட் பொருட் பகுதி

திருவருணைக் கலம்பகம் (94-வது செய்யுள்)

தலைவியைப் புகழ்தல்

கட்டளைக்கலித்துறை

அள்ளற் கடல்விட நீங்கா தகண்ட ரருணை வெற்பிற்
பிள்ளைப் பிறையுஞ் சிலையுமொப் பாநுதற் பேதைநல்லாள்
வள்ளைக் குழைபொரு கண்ணுக்குத் தோற்றம்பும் வாரிதியும்
கள்ளக் கயலு மிராசியின் மீனுங் கடைப்பட்டதே.

(இ - ள்.) அள்ளல் கடல் - சேற்றையுடைய கடலில் தோன்றிய, விடம் - விஷமானது, நீங்காத கண்டர் - நீங்காத கண்டத்தையுடையவரது, அருணை வெற்பில் - அருணையங்கிரியில், பிள்ளைப் பிறையும்-(எட்டாநாட் டோன்றிய) இளஞ் சந்திரனும், சிலையும் - வில்லும், ஒப்பாம் - ஒப்பாகிய, நுதல் - நெற்றியையுடைய, பேதை நல்லாள் - பேதையாகிய நற்குணமுடையவளே ! வள்ளைக் குழை-(நினது) காதின் குழையை, பொரு கண்ணுக்கு - மோதுகின்ற கண்களுக்கு, தோற்று - தோல்வியடைந்து, அம்பும் ;—, வாரிதியும் - கடலும், கள்ளக் கயலும் - வஞ்சனையையுடைய கயல் மச்சமும், இராசியின் மீனும் - மீன இராசியும், கடைப்பட்டது :—,

(வி-ரை.) பேதை நல்லாள் ! நின் கண்ணுக்குத் தோற்று அம்பு - அம்பும், கடைச்சல் பிடிக்கப்பட்டது ; வாரிதியும் - கடலும், கடையப்பட்டது ; கயலும் - கயல் மீனும், கடையில் விற்கப்பட்டது ; இராசியின் மீனும் - மீன ராசியும், (இராசிகளுள்) கடைசியில் அமைக்கப்பட்டது.

—கோ. இராமலிங்கத் தம்பிரான்.

தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை
தமிழிற் சிறந்தொரு வாசகமில்லை.
கல்வியிற் சிறந்தொரு கைப்பொருளில்லை.
"செல்வி"யிற் சிறந்தொரு சஞ்சிகையில்லை.

ஆராய்ச்சிப் பகுதி-Research

இந்திய ஐரோப்பியப் பெருங்குழு

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்—
காழி. சிவ. கண்ணுசாமி. B. A.]

(முன் ௩௭௬-ம் பக்கத் தொடர்ச்சி)

தெலுங்கரும் தமிழரும்

தெலுங்கரும் தமிழரும் திராவிடக் குழுவைச் சேர்ந்தவர்களா? சின்னாட்களாக, ஆந்திரர்கள் தாங்கள் ஆரியக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் தங்கள் மொழியாகிய தெலுங்கு மொழி வடமொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது என்றும் கூறிக்கொள்ள விழைகின்றனர். தமிழனாகிய யான், தமிழர்களும் தெலுங்கர்களும் திராவிடக் குழுவைச் சேர்ந்தவர்களே யென்றும், தெலுங்கர்களை என்னினத்தா ராகவே யான் கருதுகிறேனென்றும், என்னையும் தெலுங்கர்கள் தம்மினத்தாராகவே கருத வேண்டுமென்றும் கூறவே பெரிதும் விரும்புகிறேன். மேற்கூறிய வாறு நலிந்த போலிக் கொள்கைகளைக் கொண்டிருக்கும் ஆந்திரர்களுக்கு வேண்டுமானால் என் கொள்கை பிடிக்காமலிருக்கக்கூடும். இருந்தாலும், உண்மை எக்காலத்திலும் வெற்றிபெற்று நிலை நிற்கக் கூடுமன்றோ?

தெலுங்கர்கள் குழுவளவைப்படி (Ethnology) தமிழர்களினத்தைச் சேர்ந்தவர்களல்லர் என்று துணிந்து கூறவும் முடியுமா? அவ்வளவை யொருபுறமிருக்க, இன ஒற்றுமையைத் துணிதற்குப் பயன்படும் ஏனைய தேர்வுமுறைகளில், குறித்த இரண்டு இனத்தாரின் மொழியாக்கத்தை ஆராய்வதே சிறந்த முறையாகும். தற்போது பெரும்பான்மையாக வழங்கிவரும் தெலுங்கு உயர்தர நூற்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் வடமொழி கலந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை. பண்டைய தெலுங்கு இலக்கியங்களிலோ வடமொழி இத்துணைப் பெரும்படியாகக் கலப்புறவில்லை. ஆராய்ந்து பார்த்தால்

இக்கலப்பு நிகழ்ந்த தெல்லாம் பதினோராம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் என்று தெரியவருகிறது. "அச்ச தெனுகு" என்று சொல்லப்படுவதும், பண்டைக்காலத்திலிருந்தே தோற்றமுற்று வழங்கிவருவதும், ஆந்திரர்கள் என்று கூறிக்கொள்ளும் எல்லோருக்கும் தாய்மொழியாக விளங்கிவருவதும் ஆகிய செந் தெலுங்கு மொழியிலோ வடமொழிக் கலப்பு இல்லையென்றே கூறிவிடலாம். அச்ச தெனுகுவின் மூலச் சொற்கள் எல்லாம் தமிழ் மூலச் சொற்களுடனே ஒப்புமை யுடையன வாயிருக் கின்றன. அம்மா, அக்கா, அண்ணு, தாதா, ஒகட்டி, மூடு, இடு, செய்யி, காலு, மூக்கு, கன்னு, வேலு, பாலு, நீரு, காலி, மாவு, ஆவு, எலுகா, புலி, எட்டு, பொலமு, அடவி, பள்ளமு, கொண்ட, பண்டி, இல்லு, புளி, உப்பு, பப்பு, செப்பு, என்ற இத்தொடக் கத்தன வெல்லாம் தமிழ் மொழியன்றி யாவை? தமிழிலிருந்து இச் சொற்களைத் தெலுங்கு எடுத்துக் கையாண்டதா, அன்றி, தெலுங்கிலிருந்து தமிழ் எடுத்தாண்டதா என்ற கேள்விகள் எழ வேண்டுவதில்லை. வடமொழிக் கலவாத காலத்தில் தெலுங்கு தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் இச் சொற்கள் பொதுவானவை யென்பதே போதுமானது. உழவு, வாணிபம், அரசாட்சி ஆகிய, நாகரிகத்தின் முன்னணியில் நிற்கும், பல துறைகளுக்கும் வேண்டிய சொற்கள் யாவும் அச்ச தெனுகில் காணப்படுவதே ஆதிகாலந் தொட்டே தமிழரும் தெலுங்கரும் ஓரினத்தைச் சேர்ந்தவர்க ளென்பதைத் தெரிப்பதற்குப் போதிய சான்றாகும். அச்ச தெனுகு ஆரியச் சொற்களைக் கடன் வாங்கத் தொடங்கியதோடன்றி ஆரியர்தம் பழக்க வழக்கங்களை யும் பின்பற்றத் தொடங்கியது முதலே வளர்ச்சிமுறை குன்றத் தொடங்கியது. ஆரியத்திலிருந்து சொற்களைக் கடன்வாங்கிப் பயன்படுத்திபதால் தெலுங்குமொழி எத்தகைய நலமும் பெறவில்லை யென்பதைத் துணிந்து கூறலாம். ஊனமற்றதும், உள் ளீடற்றதும், மேன்போக்கில் மின்னுவதுபோலத் தோன்றுவது மாகிய ஆரியக்கலைகளைப் பின்பற்றியதால் பெருங்கேடே யெய் திற்று. ஐயகோ! ஆரியர்கள் என்று கூறிக் கொண்டால் பெருமை யென்று பிறழ வுணர்ந்த ஒரு போலி யுணர்வினாலேயே தெலுங் கர்கள் ஆரிய முறைகளையும் மொழியையுந் தாம் தழுவுவதாகப் பறைசாற்றலுற்றனர்.

ஆரியமும் திராவிடமும்

ஆரியர் தம் நாகரிகத்தையும் திராவிடர் தம் நாகரிகத்தையும் ஒருங்குவைத்து ஒப்பநோக்கிச் சீர்தூக்கிப்பார்த்தால், ஆந்திரர்கள் தாங்கள் ஆரியர் இனத்தைச் சேர்ந்தவர்களென்று கருதுவதை விட்டொழித்துத் திராவிடக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளவே முன்வருவார்கள் என்பது உறுதி. ஆந்திரர்கள் வாழ்ந்துவரும் நிலப்பகுதி தொன்றுதொட்டிலகும் தென்னிந்தியாவின் ஒருபகுதி யென்பதனுலேயே அவர்களுக்கும் தமிழர்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருந்தது என்பது பெறப்படும். அச்ச தெனுகு, பழங்கன்னடம், மலையாளம், துளுவம் என்ற இவைகளே பண்டைய தென்னுட்டு மொழிகள் என்றும் இவற்றை அடிப்படையாகக் கொண்டே செந்தமிழ் சமைக்கப் பட்டதென்றுங் கூறலாம். எனவே, இம் மொழிகட்குரியோர் எல்லோரும் தோற்றத்திலும், தொன்மையிலும், பழக்கத்திலும், நம்பிக்கைகளிலும் ஒரே குழுவினைச் சேர்ந்த தம் ஒருமைப்பாட்டை உற்றுணர்ந்து ஒருசேர்ந்து உழைத்தல் வேண்டும்.

விசுவாமித்திரமுனிவருடைய ஐம்பது பிள்ளைகளுக்கும், ஆந்திர நாட்டிலிருந்த காட்டு மிராண்டிப் பெண்களுக்கும் பிறந்து பல்கியவர்களே தற்கால ஆந்திரர்கள் என்று கூறி, திரு. ஏ.வி. தாஸ் என்பவர் தம்முடைய அறியாமையைப் புலப்படுத்தினர். நூறும் இருநூறுமாகப் பிள்ளைகளை ஒருவர் பெற்ருர் என்பதிலும், ஒருவனுக்கு ஆயிரங் கண்கள் இரண்டாயிரங் கைகள் முதலிய இருந்தன என்பதிலும் திரு. தாஸை யொத்த ஒரு தேர்ந்த வரலாற்று ஆராய்ச்சியாளர் நம்பிக்கை வைத்தது விந்தையிலும் விந்தையே. இல்லையேல், பெரிய தொகையினராகிய இனத்தாரான ஆந்திரர்களெல்லாரும் விசுவாமித்திரர் என்ற ஒருவர் கால்வழித் தோன்றியவர்கள் என்றும் அவர் கொள்வாரோ! விசுவாமித்திருடைய 50 பிள்ளைகளும் அவர்கண் மாட்டுக் கிளைத்த பல்லாயிரம் பேரப் பிள்ளைகளும் எம்மொழியில் பேசிவந்தார்கள் என்பதை இவர் நினைத்துப் பார்த்தாரா? விசுவாமித்திரரே ஆந்திரர்களுக்கு "மூல புருஷன்" என்று சொல்வது அறிவியலுக்கு எத்துணையொத்த தொன்ருகும்! அவர் பேசிய மொழிக்கு

விசுவாமித்திர மொழி என்று பெயரா! அல்லது, அவர்கள் பேரப் பிள்ளைகள் பேசியது கோண்ட், சவரா, கோயா என்ற மொழிகளில் ஒன்று! இவைகள் ஒன்றுமில்லையன்றே! அச்ச தெனுகு மொழியில்தான் பண்டைக்காலத்தில் அவர்கள் பேசியிருத்தல் வேண்டும். அவ்வச்சத் தெனுகுவின் மூலச் சொற்களோ தமிழ் மொழிமூலத்துடன் எப்புடையும் ஒத்ததாக இருக்கின்றன. இஃதிவ்வாறாயின், ஆந்திரர்கள் திரு. தாஸ் கூறியபடி கலப்புப் பிறப்பாளர் என்று கொள்ளவுங் கூடுமோ? ஆந்திரர்கள் திராவிடர்களே, தனித் திராவிடர்களே! கலப்பற்ற பெருமைவாய்ந்த திராவிடர்களே! திராவிடக் குழுவிற்குரிய உருவவமைப்பு அறிகுறிகள் அவர்கள்மாட்டு இன்றும் காணக்கிடக்கின்றன. திராவிட நாகரிகத்தின் இணையற்ற தனிச்சிறப்பை நன்குணர்ந்தார்களாயின் தம்மை ஆரியர்கள் என்று மறந்துங்கூற ஆந்திரர்கள் ஒருப்படுவரோ? (தொடரும்)

பண்டைத் தமிழிலக்கியம்

[பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்]

பண்டைக் காலத் தமிழிலக்கியங்கள், அக்காலத்து வாழ்க்கை முறைகளையும், மொழி நிலைமையையும் கண்ணாடிபோல் காட்ட வல்லதாயிருக்கின்றன. அக்காலத்துத் தமிழ் மக்கள் அற முதலிய நான்கினுள் இன்பத்தை அகத்திணையாகவும், ஏனையவற்றைப் புறத்திணையாகவுங் கொண்டனர். அவர்களது நாகரிகத்தைத் தொல்காப்பியர் கூறும் கந்தழி, அகநானூற்றுக் காப்புச்செய்யுள் முதலியன கொண்டு அளந்து அறியலாம். ஆரியரிடமிருந்து தமிழர் நாகரிகம் கற்றனர் என்று சிலர் கூறுகின்றனர். பாரதக் கதையினின்றும் புலப்படும், ஒருத்தியைப் பலர் மணத்தலும், தன் மனைவியை ஏனைய பொருள் போல அயலானுக்கு உரிமையாக்கலும் போன்ற ஆரியக் கொள்கைகள் "சொற்பாலமிழ்திவள் யான்சுமை" என்ற மாணிக்கவாசகா மணி மொழிப்படி, ஒருவனும் ஒருத்தியும் உடன் கலந்து ஒருயிர் ஈருடல் என்ன உதவிய வாழ்க்கை நடத்திய தமிழர்களுக்கு எத்துணையும் பொருந்தாது. (தமிழ் நாடு)

அறிவியற் பகுதி – Science

குரங்குகளின் பண்புநலங்கள்

[திருநிறை. மிஸ். பி. இராபர்ட்ஸ், எம்., ஏ.]

(முன் ௯அ௰-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று வயதுள்ள அதன் எஜமானியின் குழந்தை அதன் விளையாட்டுத் தோழி. அச் சிறு குழந்தை அழும் பொழுது, அதன் தாய் அவளையெடுத்து அமர்த்தாவிட்டால், உடனே அக்குரங்கு தாயிடம் போய், மிக பலத்தோடு அவள் முதுகில் ஓர் அடி கொடுக்கும். அச்சமயம் அக்குரங்கு என்ன நினைந்து வந்து அடித்திருக்குமோ தெரியாது. ஒரு வேளை 'என் அருமைத் தோழி அழுகிறாள். அவள் தாய் அவளைத் தடவியெடுத்து அழுகையை அமர்த்தவில்லையே. என்னை அவள் அடித்தாலும் பாதகமில்லை. நான் அவள் முதுகில் ஓர் அறை அறைகிறேன்'' என்று நினைத்திருக்கலாம். இப்படி நினைத்தால் அது புத்திசாலித்தனந்தான். இல்லாவிடில் என் அருமை விளையாட்டுத் தோழியைக் கண்ணீர் சொரிய வைப்பது மிகவும் அநியாயமான காரியம். இக் கருமத்திற்கு யான் எதிர்த்து நிற்பேன்'' என்று எண்ணியிருக்குமென்று நாம் சொல்லக் கூடும். பின் காட்டிய மாதிரி எண்ணியிருந்தாலும் அவ்வானரத்திற்குப் பகுத்தறியும் தன்மை (Power to reason) இருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால் இது நம்பக்கூடிய காரியமன்று. ஏனெனில், பகுத்தறிவு என்று சொல்லப்படும் மேன்மையான குணம் மனிதன் ஒருவனுக்கேயன்றி வேறெந்தவுயிருக்கும் கொடுக்கப்படவில்லை யென்பதே இயற்கை நிபுணர்களின் கொள்கை. ஒருவேளை அச்சிறு குழந்தை அழுததும் குரங்கின் மனங் கலங்கி, சும்மாயிருக்கும் அதன் தாயின்பேரில் கோபமுண்டாகித் தாயை அடித்திருக்கலாம்.

கடையிலிருந்து இறைச்சி வாங்கிவந்ததும், அதன் எஜமானி ஒரு துண்டு வெட்டிக் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் ஓரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் முரடான பாகத்தை அறுத்து கொடுத்தபொழுது வேண்டாமென்று மறுத்துவிட்டு, அந்த அம்மையின் கையைப் பிடித்து இறைச்சியின் மெதுவான உட்பாகத்

தைக் குறித்துக் காண்பித்ததாம். அதில் கொஞ்சம் அறுத்துக் கொடுத்தபொழுது அவ்வானரம் வாங்கிப் புசித்துமகிழ்ந்ததாம்.

இன்னும் ஒரு குரங்கிற்கு ஏதாவது தீங்கு நடந்தால் மற்றொரு குரங்கு தன்னால் கூடியவரையில் அதற்குதவி செய்கின்றது. ஒரு சமயத்தில் ஒரு சிறு குரங்கு கீழே மயங்கி விழுந்தது. அப்போது அருகில் நின்ற மற்றொரு பெண் குரங்கு, அது தன் குழந்தையாய் இராவிட்டாலும், அதனிடம் விரைவாக ஓடிவந்து, அதை எடுத்து, தடவிக்கொடுத்து, ஆதரித்தது. ஒரு குரங்கின் கூட்டிற்கெதிரே, ஒரு ஆப்பிள் பழம் புதைக்கப்பட்டது. அநேக மணி நேரத்திற்கப்புறம், குரங்கை திறந்துவிட்டபொழுது அது நேரே பழம் புதைக்கப்பட்ட விடத்திற்கு ஓடிவந்து, மண்ணைத் தோண்டி யெறிந்துவிட்டுப் பழத்தை எடுத்துச் சாப்பிட்டதாம். மேற்கண்ட காரியங்களை யெல்லாம் யாம் உற்று நோக்குங்கால் இதர மிருகங்களைவிட, குரங்குகள் புத்தியிற் சிறந்தனவென்று விளங்குகின்றது. இதை நாம் பகுத்தறியும் தன்மையென்று தப்பெண்ணம் கொள்ளலாகாது.

வேறு சில நிகழ்ச்சிகளால் குரங்குகள் பகுத்தறியும் தன்மையைச் சற்று அடைந்திருக்குமாப்போல் தோன்றுகிறது. மற்றொரு வித வாலில்லாக் குரங்கு (Orang-outang) சுமைகளைக் கிளப்புமோர் கம்பியைத் (Lever) தானே செய்து அதைப் பயன்படுத்தும் விதத்தையும் கண்டுபிடித்தது. ஒரு சிறு கப்பி (Lever) செய்துவிட்டு, அதே மாதிரியாகப் பெரிய கப்பிகள் செய்தது. அப்பால் அதை உபயோகப்படுத்த ஆரம்பித்தது. அருகில் மற்றொரு கூண்டில் வசிக்கும் தன் இனத்தானைப் பார்க்க வசதியாய் இல்லையே என்று இதற்கு அநேக நாளாய்க் கோபம். ஆகையால் தன்னுடைய கப்பியால் கூண்டின் பலகை தாங்கியை உடைத் தெறிந்துவிட்டுக் கூண்டின் இருப்புக் கம்பிகளில் இரண்டைவளைத்து, தன்னுடைய தலை நுழையும் படியாக வசதி செய்துகொண்டது. அதிலிருந்து தன் நண்பனைப் பார்க்க வேண்டுமானால், அவ் விரண்டு கம்பிகளுக்கும் இடையே தன்னுடைய தலையைவிட்டுப் பார்க்கும்.

சுருங்கக் கூறின், குரங்குவகைகள் வெகு சுறுசுறுப்பானவை. அவைகளுக்கு அதிகக் கூர்மையான புத்தியுண்டு. எதையும் பரிசோதித்துப் பார்க்கும் தன்மையும், அதிக ஞாபகத் தன்

மையும், ஒரு காரியத்தைக் கண்ணால் பார்த்துக் கிரகிக்கக்கூடிய சக்தியும் இவ்வானரங்களுக்குண்டு. இவைகளில் சில அதிக அறிவுடையனவாய்த் தோன்றுகின்றன.

விலங்கியல் நூற்படி (Zoology) குரங்குகள் மனிதனைவிட ஒரு படி தாழ்ந்திருந்தாலும், குரங்கிலிருந்தே மனிதன் தோன்றியிருப்பான்; குரங்கே மனிதனுக்கு மூலதகப்பனாயிருந்திருக்கலாம் என்பது கொள்கை. மரங்களில் வசித்து வந்த குரங்குகளில் சில, உணவு கஷ்டத்தினாலேயோ அல்லது மரங்களில் இருப்பிடம் போதாமல் இருந்ததினாலேயோ, அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ, மரங்களிலிருந்து கீழே குதித்துவிட்டன. கீழே குதித்த குரங்குகளுக்கு போதுமான சஞ்சாரமும், உணவும் கிடைத்தபடியால் கீழே நடமாடிக் கொண்டு சந்தோஷமாய் அலைந்துகொண்டிருந்தன. பல தலைமுறைகளுக்கப்பால் அக் குரங்குகளிலிருந்து உண்டான மற்றக் குரங்குகள், காலைக் கீழே ஊன்றி, உடம்பை நேரே நிறுத்தி நிற்க முயன்றன. அம்முயற்சியின் பலனால் அநேக ஆண்டுகளுக்குப் பின்பு குரங்குகள் நேரே நிற்கும் தன்மையைப் பெற்றுக்கொண்டன. இவ்விதமாய் நேரே நிற்கும் குரங்குகளிலிருந்து மனிதன் உண்டானான் என்பதே இயற்கை நூற்படி ஆதி மனிதனின் சரித்திரம். இதனையொத்தே பூமியைத் தோண்டி மிருகங்களின் அச்சுக்களையும், எலும்புகளையும் சோதித்துப் பாக்கும் வகுப்பார் (Palaeontologists) குரங்குகளுக்கும் மனிதருக்கும் நடுவில் சில உயிர்வகைகள் இருந்திருக்கவேண்டுமென்றும், பூமியின் கீழிருந்து எடுக்கப்பட்ட எலும்புகள் மூலமாய்த் தோன்றுகின்றது என்று சொல்லுகின்றனர். அவ் வுயிர்களிலிருந்து எல்லாப் படைப்புக்கும் மேலான மனிதன் உண்டாயிருக்கலாம் என்பது கொள்கை. இதை முன்னிட்டே குரங்குகளுக்கும் மனிதனைப் போல் பகுத்தறியும் தன்மையிருக்கிறதா என்று கண்டறியுமாறு இயற்கை நூலறிஞர்கள் குரங்குகளை வளர்த்து அவைகளின் நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்க்கிறார்கள். பகுத்தறிவினால் மனிதனானவன் எவ்வளவோ சிறந்து விளங்குகிறான். அதனாலே அவன் எல்லாப் பிறப்புக்கும் தலையாகத் தோன்றுகிறான். பகுத்தறிவு என்னும் குணம் அவனிடம் இல்லாதிருந்தால் அவன் மற்ற மிருகங்களுக்கு ஒப்பானவனே.

பொருணூல்—(Economics)

[திரு. B. நடராஜ பிள்ளை B.A. (Hons)]

(முன் ௩௮௩-ம் பக்கத் தொடர்ச்சி)

கீழே பொறிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் 1824-34-க்கும் 1840-50-க்கும் இடையே ஏற்றுமதி வியாபாரத்தில் பண்ட வகையிலும் சென்ற திசை நெறியிலும் எழுந்த மாறுதல்களை நன்கு விளக்கும்.

1824-34-க்கும் 1840-50-க்கும் ஆண்டுதோறும் இடையே சென்னை ஏற்றுமதி வர்த்தகத்தின் சராசரிப் புள்ளி விவரங்கள்

தேசங்கள்	1824-34 (10 ஆண்டின் சராசரி)		1840-50 (10 ஆண்டின் சராசரி)	
	நெசவுச் சரக்குகள் ரூ.	மொத்தம் ரூ.	நெசவுச் சரக்குகள் ரூ.	மொத்தம் ரூ.
மலாக்கா ஜலசந்தி	14,58,488	16,13,512	7,60,994	10,22,264
சுமத்திரா மேலேக்கரை	1,43,373	1,59,102	5,329	8,213
மணிலா	1,70,644	1,72,899	,,	,,
பெகு	1,35,000	2,75,000	1,10,000	சிறிது குறைவு
பெர்ஸியன் நீர்க்குடாவும் அரேபியாவும்	5,46,000	13,70,000	1,68,000	12,00,000
சீனு	,,	6,50,000	,,	14,50,000
பிரிட்டன்	16,00,000	29,75,000	5,75,000	50,00,000
வங்காளம்	2,00,000	9,00,000	4,75,000	14,73,000
பம்பாய்	12,50,000	50,00,000	9,75,000	73,00,000
இலங்கை	6,75,000	14,50,000	7,50,000	39,75,000

இந்தக் கால அளவையில், சென்னை ஏற்றுமதிப் பொருள் களில் கைத்தொழிற் சரக்குகளி னளவு 40 சதம் குறைவுபட்டது. ஆனல் கைத்தொழிற் பண்டங்களல்லாத விளைபொருள் கள் முதலியவற்றின் ஏற்றுமதி பெரிதும் விரிந்தது. இது கீழ் வரும் புள்ளி விவரங்களால் தெளிவாகும்.

1824-34 ம், 1840-50-ம் ஆகிய பத்துப் பத்தாண்டுகேளுக்கு சென்னை ஏற்றுமதியின் மொத்தத் தொகை

சரக்குகள் விவரம்	1824-25 முதல் 1833-34 வரை ரூ.	1840-41 முதல் 1849-50 வரை ரூ.
நெசவுப் பொருள்கள்	619,89,315	382,73,194
பஞ்சு, பருத்தி முதலியன	82,45,741	426,93,304
தானியம்	239,42,294	377,96,556
சந்தனக்கட்டை	23,18,755	12,29,660
ஏலம் முதலிய வாசனைத் திரவியங்கள்	86,50,691	111,68,595
சர்க்கரை	,,	95,73,161
எண்ணெய் வகைகள்	,,	6,77,141
எண்ணெய் விதைகள்	,,	2,44,363
சாயம் அவரி முதலியன	70,90,670	216,52,303
மஞ்சள்	,,	3,68,614
காப்பி	3,29,092	18,44,784
உப்பு	17,47,514	12,66,079
தோல் வகைகள்	3,42,830	19,14,624

கைத்தொழிற் பண்டங்களால் ஏற்றுமதியில் ஏற்பட்ட குறைவுக்கு மேலாக பச்சைப் (Raw) பொருள்களால் ஏற்பட்ட பெருக்கு இருப்பது தெற்றென விளங்கும். பிற்காலத்தில் இப் பச்சைப்பண்டங்களின் அளவு விரிந்து, இறுதியில் நம் ஏற்றுமதியின் ஏறக்குறைய முழுப்பாகமும் பச்சைப்பண்டங்களே ஆசித்தீர்ந்தன. பெரிதும் கைத்தொழிற் பண்டங்களிலமைந்த ஒரு ஏற்றுமதி வாணிப நிலையில் நின்று முழுதும் பச்சைப் பொருட்களாலாய ஒரு ஏற்றுமதி வாணிப நிலைக்கு மாறியதால்

வந்த தடுக்கரும் பலனேயாகும். இவ்வாறு சென்னையிலிருந்து வெள்ளியும் தங்கமும் வெளிப்போந்தது. எனவே இந்தத் தலைகீழ் மாற்றம் இடுக்கண் விளைத்தது இயல்பேயன்றோ? விலை நிலையினைக் குலைத்து நாட்டில் நிகழ்ந்துள்ள பொருளாதார நெருக்கடிகளில் மிகப்பெரியதொன்றை எழுப்பியதும் வியப்பாமோ?

2. சீனாவோடும் பிரிட்டனோடும் நடந்துவந்த ஏற்றுமதி வாணிபம் மிக விரிந்ததெனில், அதன் பயனாக தங்கமும் வெள்ளியும் மாகாணத்துள் ஏதனால் வந்திலது என வினவப்படலாம். ஆனால், சென்னை மாகாணத்துள் நிதி புகுதாதற்கு பின்னு மிருந்த ஒரு சிறப்பியலை இங்கு விளக்குவது அவசியமாகும். பிரிட்டினிலிருந்தோ, அன்றி சீனாவிலிருந்தோ, அன்றி பிரிட்டனுக்குக் கடனாளியாக இருந்த பிறநாடுகளிலிருந்தோ இம்மாகாணத்துக்குப் பணம் வரவேண்டியதாயிருந்தால், அந்தக் கணக்கை யெல்லாம் கம்பெனியின் இங்கிலாந்துத் தலைவர்கள் இந்தியப் பொக்கிஷங்களின் பேரில் வரவு வைத்துக்கொண்டு, பதிலாக 'பில்'கள்வழங்கி முடித்து வந்தார்கள். அதன்பயன் என்ன வாயிற் றென்றால், இயல்பாக வாணிப நெறியில் நமக்கு வரவேண்டும் பொன்னும் வெள்ளியும் அங்ஙனம் வாராது தடைபெற்றன். 1834-ல் தான் கம்பெனியார் இந்த 'பில்' முறையைப் பெருந் தொகைகளுக்குக் கையாடத்தலைப்பட்டனர். அதன் பெருக்கு எத்துணை விரைவாக விரிந்த தென்பது கீழ்வரும் புள்ளி விவரங்களால் விளங்கும்.

கம்பெனித் தலைவர்களால் கையாளப்பட்ட பில்களின் ஐந்து ஆண்டைய சராசரித்தொகை

1834—35	ரூ. 31,610
1839—40	ரூ. 14,31,685
1844—45	ரூ. 13,87,586
1849—50	ரூ. 39,21,580

3. மேற்குறித்த காரணங்களே யன்றியும், வேறுசில அரசியல் நிகழ்ச்சிகளாலும் தங்கமும் வெள்ளியும் மாகாணத்திலிருந்து வெளியேறின. அயல் நாடோடு இங்கிலாந்து விளைத்த போரினுக்கு இவணிருந்து அனுப்பப்பட்ட படைகட்குக் கொடுக்க படவேண்டும் சம்பளத்தொகை முதலிய செலவுகட்காகவும், சமாதானகாலத்து எல்லைப்புறத்தும் அப்படைகளைப் போஷித்தற்கு ஏற்பட்ட செலவுகட் கெனவுப், பிரிட்டிஷ் சாம்பிராஜ்ஜியத்தைக் காப்பதற்கு ஏற்பட்ட பொதுச் செலவில் இம்மாகாணம் செலுத்தவேண்டிய பங்குத்தொகைக்குமாக, அரசாங்கப் பொதுக்கணக்கின் (Public account) சார்பில், இறக்கு மதியினும் ஏற்றுமதியாகவேண்டிய நிதியினளவே மிஞ்சி நின்றது. உதாரணமாக, 1932-ல் சென்னையிலிருந்து தக்கபடியான நாணயங்கள் கம்பெனியின் படைகளுக்குதவ மலாக்கா நாட்டுக்கு அனுப்பப்பட்டன. பர்மாப்போரிலும் சீனப்போரிலும் ஆங்கிலேயர் செலுத்திய படைகள் சென்னையிலிருந்து அனுப்பப்பட்ட பணத்தாலேயே திரட்டப்பட்டது. மற்றுமொரு அரசியல் காரணமுண்டு. அதாவது மலபார், கன்னடம் ஆகிய இரண்டு ஜில்லாக்களின் வரிவருமானங்களும் சிறிதாண்டுகளாக நாணயவடிவில் நேராகவே பம்பாய் மாகாண அரசாங்கத்துக்கு அனுப்பப்படவேண்டியதாகத் திட்டமிருந்ததால் ஆண்டாண்டுதோறும் 20 இலட்ச ரூபாய்பெறுமான நாணயங்கள் மாகாணத்தை விட்டு வெளியேறின. இவ்வாறாக அரசாங்கச் சார்பாக மட்டுமே 1820-21-முதல் 1849-50 வரை 30 ஆண்டுகளில் ஏறக்குறைய 15 கோடி ரூபாய் வெளிச்சென்றதென்று அன்றைய கணக்கொன்று மதிப்பிடுகின்றது. மேலே விவரித்த நிகழ்ச்சிகளின் திரண்ட பயனெல்லாம் ஏராளமான நாணயம் நீண்டகாலமாக நாட்டை விட்டு வெளியே போய் விட்டதென்பதுவாகும். இதனைச் சென்னை அரசாங்கப்பத்திர நிலையத்திலிருந்து சேர்த்துள்ள கீழ்வரும் புள்ளி விவரங்களால் அறியலாகும்.

(தொடரும்)

இவ்வுலகத்திலேயே, முதற் செய்தித்தாள் அச்சடித்து வெளியிடப்பட்டது நியூரம்பர்க் என்ற ஊரில்தான். அவ்வாறு செய்தித்தாள் வெளிவந்தது 1457-ம் ஆண்டாகும்.

மொழிபெயர்ப்பு-Translation

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் M.A.,B.L.]

கபிலர் இயற்றிய

இன்னா நாற்பது

Of Unpleasant Things : Forty (Stanzas)

(முன் ௨௮௨-ம் பக்கத் தொடர்ச்சி)

௩௧. நெடுமா நீள்கோட் டுயர்பாய்த லின்னா
கடுஞ்சின வேழத் தெதிர்சேற லின்னா
ஒடுங்கி யரவுறையு மில்லின்னா வின்னா
கடும்புலி வாழு மதர்.

31. It is unpleasant to jump from the long bough of a tall tree; it is unpleasant to go before an incensed elephant; it is unpleasant to live in a house infested by snakes; it is unpleasant to pass the road where fierce tigers lodge.

௩௨. பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்மை யிலாளர் பகை.

32. It is unpleasant to sing to the accompaniment of an ill-tuned *Vina*; unpleasant the count of days by one who knows not arithmetic; unpleasant is the sound of drum that has not been rubbed with mud; unpleasant the hatred of the ungracious.

௩௩. தன்னைத்தான் போற்றா தொழுகுத னன்கின்னா
முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா
நன்மை யிலாளர் தொடர்பின்னா வாங்கின்னா
தொன்மை யுடையார் கெடல்.

33. It is unpleasant for one to act in disregard of oneself; unpleasant are the words of those who speak not to the face but

behind cne's back; the friendship of the wicked is unpleasant; likewise the loss of ancient and old-time wealth.

௩௪. கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா
முள்ளுடைக் காட்டி னடத்த னனியின்னா
வெள்ளம் படுமாக் கொலையின்னா வாங்கின்னா
கள்ள மனத்தார் தொடர்பு.

34. A drunkard's words are void and useless; it is very unpleasant to walk in a thorny forest; it is unpleasant to kill an animal struggling in a flood; unpleasant too the friendship of the deceitful.

௩௫. ஒழுக்க மிலாளர்க் குறவுரைத்த லின்னா
விழுத்தகு நூலும் விழையாதார்க் கின்னா
இழித்த தொழிலவர் நட்பின்னா வின்னா
கழிப்புவாய் மண்டிலங் கொட்பு.

35. It is unpleasant to establish relationship with the undisciplined; unpleasant are the books that deal with improper things; it is unpleasant to associate with those whose work is low; and unpleasant the horse that swirls in a hateful manner.

௩௬. எழிலி யுறைநீங்கி னீண்டையார்க் கின்னா
குழலி னினியமரத் தோசைநன் கின்னா
குழவிக ளுற்ற பிணியின்னா வின்னா
அழகுடையான் பேதை யெனல்.

36 If clouds cease to rain, it is unpleasant for men; the sound through trees sweeter than a flute is unpleasant; the illness of children is unpleasant; unpleasant when a beautiful person is an imbecile.

௩௭. பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
வருமனை பார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடங் கைவிடுவார் நட்பு.

37. It is unpleasant for a poor man to desire to help others; it is unpleasant in a huge city with palaces to live without money; it is unpleasant always to look to others for food; unpleasant too the friendship of those who forsake in distress.

௩அ. நறிய மலர்பெரிது நாறுமை யின்னா
துறையறியா னீரிழிந்து போகுத லின்னா
அறியான் வினப்படுத லின்னா வாங்கின்னா
சிறியார்மேற் செற்றங் கொளல்.

38. That a big flower should not give much scent is unpleasant; it is unpleasant for one who does not know the ford to get into the water ; it is unpleasant for a fool to be questioned. It is most unpleasant to get angry with the low.

௩௯. பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா
மறமிலா மன்னர் செருப்புகுத லின்னா
வெறும்புறம் வெய்புரவி யேற்றின்னா வின்னா
திறனிலான் செய்யும் வினை.

39. The folly of going after another's wife is unpleasant; it is unpleasant for cowardly kings to go into battle; it is unpleasant to ride without a saddle a full-blooded horse and unpleasant are all the deeds of the incompetent.

௪0. கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா
கடித்தமைந்த பாக்கினுட் கற்படுத லின்னா
கொடுத்து விடாமை கவிக்கின்னா வின்னா
மடுத்துழிப் பாடா விடல்.

40. The generosity of a beggar is no good; unpleasant is stone amid betel-nut when chewing; it is unpleasant on the part of a poet to ask for more gifts after he has been given something; unpleasant too if he does not sing of one who has fed and protected him.

௪௧. அடக்க முடையவன் மீளிமை யின்னா
துடக்க மிலாதவன் றற்செருக் கின்னா
அடைக்கலம் வவ்வுத லின்னாவாங் கின்னா
அடக்க வடங்காதார் சொல்.

41. The prowess of a well-disciplined man will cause pain; painful is the pride of an undisciplined person; unpleasant it is to appropriate a pledge ; most unpleasant is the uncontrolled speech of those who refuse to be controlled.



கடைச் சரக்குகளைப் பயன்படுத்தும் முறை

பெருங்காயம் (Asafoetida)

("காசிகன்" எழுதுவது)

பெருங்காயம் தமிழர் உணவிற் சேர்க்கப்படும் ஒரு பொருள். அது நோய்க்கு மருந்தாகவும் பயன்படுவதாகும். பலசரக்குக் கடைகளிலும் மருந்துக் கடைகளிலும் அது கிடைக்கும்.

நோய்க்கு மருந்தாகப் பயன்படும் காயம் உலர்ந்ததாக இல்லாமல் ஈரமாயும் வெள்ளுள்ளி மணத்தை யொத்த மணமுடையதாயும் இருத்தல்வேண்டும். அதை மாத்திரையாகச் செய்தும் குடி நீராகச் செய்தும் பயன்படுத்தலாம்.

நெறிகட்டிக் காய்ச்சல் என்று சொல்லப்படும் ஒருவகைக் காய்ச்சலுக்கு, பெருங்காயத்தில் சுண்டைக்காயளவுக்கு மூன்று நான்கு மாத்திரைகள் செய்து இருப்புக் கரண்டியிலிட்டு நெருப்பிற் பொரித்துக் கொண்டு அவற்றைப் பச்சை வாழைப்பழத்தில் வைத்து உட்கொண்டால் அக்காய்ச்சல் நீங்குமென்பர்.

பத்து "அவுன்ஸ்" நீரில் ஐந்து "திராம்" காயத்தைக்கொஞ்சம் கொஞ்சமாக உறைத்து முழுவதையுங் கலக்கினால், கடைகளிற் கிடைக்கும் கட்டிப்பாலை யொத்த ஒரு பக்குவத்திற்கு வரும். அதை வடிகட்டி வைத்துக் கொண்டால் வயது வந்தவர்கள் வேண்டும்போது உட்கொள்ளலாம்.

சூதக வாயு, மயக்க மூர்ச்சை, நாட்பட்ட இருமல், சுவாச காசம், கடினமான விக்கல், குன்மவலி ஆகிய இந்நோய்களுக்கு மேற்சொன்ன பெருங்காயநீரில் அரை "அவுன்ஸ்" முதல் ஒரு "அவுன்ஸ்" வரை தனித்தாவது, சுக்குக்குடி நீருடன் கலந்தாவது இரண்டுமணி நேரத்திற் கொருமுறை கொடுக்கலாம். வலி மிகுதியாயுள்ளவர்களுக்கு அரைக் குன்றிமணி எடை அபினி உடன் சேர்த்துக் கலக்கிக்கொடுக்கலாம். இவை வயது வந்தவர்களுக்குச் சொல்லப் பட்டவையாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் வாயுக்கும் குன்மவலிக்கும் இப்பெருங்காய நீரில் ஒரு தேக்கரண்டி யளவு கொஞ்சம் கறுவாய்ப் பட்டைத்தூளிலாவது, ஓமக்குடி நீரிலாவது கொடுக்கலாம். வலுக்குறைந்து வெளிறின குழந்தைகளுக்குக் காணும் சன்னி யிழுப்புக்கும் அவ்வாறே இரண்டு மணி நேரத்திற் கொருமுறை கொடுக்கலாம்.

குழந்தைகளுக்குக் காய்ச்சலில்லாமல் இருமல்மட்டும் நாட்பட இருப்பினும், காய்ச்சல்கண்டு மாறியபின், வலுக்குறைவும் இருமலும் இருப்பினும், பெருங்காயநீர் நலங்கொடுக்கும். இரண்டுவயதுள்ள குழந்தைகளுக்கு இவ்வித நோய் காணின் ஒரு குன்றிமணி எடை பெருங்காயத்தைச் சிறிது நீரிற் பால்போற் கரைத்து வடிகட்டி இரண்டு மூன்று மணிகட்கு ஒரு முறை கொடுக்கலாம். இந்த எடையைக் குழந்தைகளின் வயதிற் கேற்றவாறு கூட்டியுங் குறைத்துங் கொள்ளலாம்.

"கக்குவான்" என்று சொல்லப்படும் கக்கிருமலுடன் காய்ச்சல் கண்டு, காய்ச்சல் மாறி இருமல் மட்டும் நாட்பட இருந்துவருங் குழந்தைகளுக்கும் காயநீரில் ஒரு தேக்கரண்டி வீதம் நாளுக்கு நாலைந்துமுறை கொடுக்க நலமுண்டாகும்.

ஆண் பெண் சேர்க்கையின்றி, அறிவியலாராய்ச்சி முறைப்படி கூட்டப்பட்ட சில மருந்துப் பொருள்களை யுட்கொள்வதாலேயே மகளிர் கருத்தரித்தல் கூடும் என்று மேனாட்டறிஞர்கள் கருதுகிறார்கள். எட்டுப் பெண்கள் அவ்வாறு கருத்தரித்துள்ளதாகவும் செய்தி வெளியிடப்பட்டுளது.

கவின்கலைப் பகுதி—Fine arts

மத்தவிலாசப் பிரகசனம்

அல்லது

சம்பந்தர்கால சமயிகள் நிலை

[திரு. தி. கி. நாராயணசாமி நாயடு அவர்கள்]

(௫௫ - ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாடகத்தை இயற்றியவன் முதல் மகேந்திரனே என்பதற்கு நாடக முன்னுரையில், நாடகாசிரியன் சிம்மவிஷ்ணு வர்மனுன பல்லவ மன்னன் மகன் என்றும், முடிவுரையில் சத்ருமல்லன் என்ற இவனது விருதுப்பெயர் வருதலானும், மாமங்தூரிலுள்ள இவனது கல்வெட்டில் இந்நூற் பெயர் காணப்படுதலானும், குணபரன், மத்தவிலாசன் என்ற பட்டக் கிளவிகள் இந்நாடகத்தின் நடுவண் இரட்டுற மொழியும் நயத்துடன் பயந்துவருவதானும், எழுவாயில் வரும் 'வ்யாப்தாவ நிபாஜநம்' என்ற தொடர் அவனது பட்டப்பெயராய அவநிபாஜநனைக் குறிப்பதானும் தெளிவு.

துப்ராய், பார்னட், கீத், மறைமலையடிகள், பி. தி. சீநிவாச ஐயங்கார், டாக்டர். கிருஷ்ணசாமி ஐயங்கார், கோபான் இன்ன ஆசிரியர்கள் இந் நாடகத்தைப் புகழ்ந்து சிறப்பித்ததை யுன்னி இத்தமிழ் மொழிபெயர்ப்பு மூலத்தைத் தழுவி எழுதப்பட்டது. பிராகிருத நடையை வாயுரை நடையில் வைக்கப்பட்டிருக்கிறது.

நகவே தகும் எம்பிரான் நீசெய்த நாடகமே

—திருவாசகம்.

(கீழ்வருவன இந்நாடகத்தைக் குறித்த ஆராய்ச்சி யுரைக் குறிப்புகள்)

L. D. Barnett.

But within this loosely jointed frame-work there is much rollicking fun of the knock-about kind, with no small measure of wit and humour. The characters are vigorously drawn, especially the tipsy Kapalin with his unfailing flow of logic and theology

and the Buddhist monk with his leanings towards wine and beauty and his desire to find scriptural warrant for them, while the damsel's shrewish feminity is cleverly sketched, and the poor lunatic babbles and acts with a consequent inconsequence that reminds the reader of Lewis Carroll. Altogether the little play is a remarkably smart product of the picaresque genre, replete with mirth and satire.

'The Sanskrit Drama' by A. B. Keith.

Page—185. "The author undoubtedly shows a considerable knowledge of the tenets of the Buddhists, and the play is not unamusing, though the subject is much too trival for the pains taken to deal with it. The style is certainly appropriate to the subject-matter; it is like that of Harsha, simple and elegant, while many of the verses are not without force and beauty. . . . . There is, as in all the later Prahasanas, a certain incongruity between the triviality of the subject-matter and the elaboration of the form but the king has the merit of avoiding gross vulgarity which marks normally the later works of this type."

"Short as the play is, it shows a variety of Prakrits, for of the *dramatic personae* only the Kapalin and the Pasupata speak Sanskrit, while the madman, the Buddhist, and Devasoma talk in Prakrit."

Dr. S. Krishnaswami Iyangar.

A sanskrit burlesque ascribed to him and called Mattavilasa Prahasana is not merely evidence of what may be regarded as partiality for sanskrit literature, but it also throws considerable light upon religious condition of the times. The purpose of the work is to bring into ridicule the votaries of the various cults that prevailed at the time. An ascetic Pasupata, a Kapalika and his wife, and a Buddhist mendicant are brought into colloquy in the play and held up to ridicule. The omission of the jain in this group may be led to the inference that at the time he composed the work Mahendra was a jain, and might thus lend support to the Saiva tradition that rather late in his life he was converted to Saivism by the SAINT APPAR.

That a work of the character of Matta-vilasa Prahasana should be composed in Kanchi for the purpose for which it should have been intended, is evidence of a certain degree of prevalence of Sanskrit learning.

(Some Contributions of South India to Indian Culture—Page 204.)

Light thrown on contemporary life by the work:—

This little play is full of interest to the student of religious history as it affords valuable material regarding the extinct Kapalika Faith, and the vices of Sakya Bikshus and the views regarding the teachings of the Buddha held by the followers of other religions, such as Kapalikas. "From the Mattavilasa prahasana it becomes very clear that to a Kapalika the Kapala is as essential as is a sacred thread to a Brahmana. If he loses it he should provide himself with another in a stated time. He should cover his body with ashes and make himself hideous, and drink liquor from skull of a human being . . . . one of his articles of faith is that the effect always resembles to a certain extent, the cause; therefore, from the practice of the austerities in this life one cannot obtain bliss in another life since austerities and bliss are of opposite nature. The Kapalikas carried in addition to the Kapala, a cow's horn both for blowing during their worship and drinking from. The people of this faith associated freely with women Kapalikas. . . . . The opinions held by the particular Kapalika, Bhatya-soma of our play, regarding the sakyabikshus, are that the sakyabikshus indulged freely in animal food and fattened themselves pecuniarily by being the managers of several Viharas, and led a comfortable life, against all the rules of their order; they covered themselves only to conceal their foibles. Their teacher Buddha, did nothing more than steal his doctrines from the Vedanta and the Mahabaratha of the Brahmans, and compiled therefrom his doctrines. The mention of Buddhas, Bikshus, Kapalikas and Pasupatas, in his burlesque by Mahendravarman I. as among the inhabitants of Kanchipuram bear out the surmise that Buddhism flourished there till atleast the seventh century A.D. and that the statement of HIUEN TSANG regarding the existence in Kanchipura of a large number of Viharas find support in this work of Mahendravarman.

R. GOPALAN, M.A.

(The Pallavas of Kanchi—Page 94)

காலஞ் சென்ற இசைக்கலை முடிமன்னர்

திரு. (நாயனு) சுப்பிரமணிய பிள்ளை

(முகப்புப் படம் பார்க்க)

காஞ்சி மாநகரில் 1887-ம் ஆண்டு சூலைத் திங்களில், சிறப்பு வாய்ந்த இசைவாணி தனக்கோடி யம்மாளுக்குப் புதல்வராக திரு. நாயனு பிறந்தார். மாநிறமும் கட்டமைந்த உடலும், கள்ள மற்ற பரந்த முகமும் அகன்ற கண்களும் உடையவர்.

இளமையில் அவர் தெலுங்கே பயின்று வந்தார். பின் சிறிது காலங் கழித்துத் தாமாகவே தமிழ்க்கல்வி பயின்ருர். சிறிது ஆங்கிலப் பயிற்சியுமுடையவர். ஏறக்குறைய பதினெட்டு வயது வரையில் இசையில் மிகுந்த ஆர்வமின்றி சிலம்ப வித்தை யிலும் மற்போரிலுமே ஆர்வங்கொண்டு பழகிவந்தார்.

எட்டையபுரம் இராமச்சந்திர பாகவதர் என்பார் காஞ்சி புரத்தில் இசையரங்குகள் கூட்டிப் பாடிவந்ததைக் கேட்டபோது தான் பிள்ளையவர்கட்கு முதன்முதல் இசையுணர்ச்சி யுண்டா யிற்று. அதன்பின் சென்னையில் கோனேரிராஜபுரம் வைத்திய நாத ஐயர் பாட்டைக் கேட்டு அவரையே இசைக்குத் தெய்வ மாகச் சிலகாலங் கருதிவந்தார்.

இவ்வாறிருக்கையில் கோனேரிகுப்பத்தினருகிலுள்ள திரு வீரட்டானேசுவரர் கோவிலில் வந்து தங்கியிருந்த ஒரு முனி வரின் நட்பு இவருக்கு உண்டாயிற்று. நாலரையாண்டளவு அவரிடம் இசை நுணுக்கங்களையும், பல்லவி பாடும் வழி, அமைப்பு, தாள வரிசை முதலியவைகளையும் பிள்ளையவர்கள் கற்றுக்கொண்டார். பல்லவியின் சொற்கோவைக்குரிய இலக் கணங்களில் மூன்றைக் கற்றுக்கொண்டார். மற்ற இரண்டையும் கற்றுக்கொள்வதற்குள் முனிவர் மறைந்தருளினர். இதற்குள் பிள்ளையவர்கட்கு மணமுமாயிற்று.

இதுமுதல் இசையரங்கில் ஈடும் எடுப்பும் இல்லாத நிலையில் பிள்ளையவர்கள் இருந்துவந்தனர். முதன்முதலாக இசையரங்கு களில் தமிழ்ப்பாட்டுக்கு மேன்மையும் முதன்மையும் அளித்தவர் திரு. பிள்ளையவர்களே. இசைக்குரிய தாளவகைகள் எல்லாம் அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ்க் கருவூலத்தி லேயே அமைந்துகிடக்கின்றன என்பதை யெடுத்துக் காட்டித் திருப்புகழ்க்குப் பெரும்புகழ் அளித்தவர் பிள்ளையவர்களே. இதனாலேயே முருகப்பெருமான் மீதும் திருப்புகழ், தேவார திரு வாசகங்கள் ஆகிய தமிழ் மறைகளின்மீதும் அவர் கொண்டிருந்த பற்று விளங்காநிற்கும். மட்டற்ற புது இராகங்களையும் பண்

களையும் தாமே உற்றுணர்ந்து அமைத்துப் பாடிய பெருமை பிள்ளையவர்கட்கே உரியதாகும். பூவென்றால் தாமரை என்பது போல, பல்லவி யென்றால் திரு. நாயனுபிள்ளைதான் என்ற பெயர் வழங்குவதாயிற்று. மடங்கலேற்றைப்போல் இசையரங்குகளில் அமர்ந்து அவர் பாடத் தொடங்கின் வேறு எவ்விசைவாணர் அவர்முன் வாய்திறக்கக்கூடும்?

தமிழ் நாட்டில் எந்த இசைவாணரிடம் கற்றுக்குட்டிகள் மிகுதி யென்று கேட்டால் திரு. பிள்ளையவர்களிடமேயென்று எல்லோரும் கூறுவார்கள். தம்மிடமுள்ள கற்றுக்குட்டிகள் தம்மைப்போற் பாடிப் பெயர்பெறுவதே தமக்குப் பெருமை யென்பது பிள்ளையவர்கள் கொள்கை. கற்றுக்குட்டிகளுக்கு இசை பயிற்றுவிக்குங்காலத்தில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்து அவர்களுடைய அன்பைப் பிணித்துக்கொள்வதில் பிள்ளை இணையற்று விளங்கினர். கற்றுக்குட்டிகளில் தலைசிறந்து விளங்குபவர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையவர்களாவார்.

தமிழிசையில் வைத்த ஆர்வ மிகுதியினால் திருநெல்வேலி சுந்தர ஓதுவாமூர்த்திகளைத் தம் சிறந்த நண்பர்களில் ஒருவராக அவர் கொண்டிருந்தனர்.

இத்தகைய முடிசூடாமன்னராயிருந்து விளங்கிய பெரியார் இவ்வாண்டு மேத்திங்கள் 2-ம் நாள் இரவு விண்ணுலகேகினர். ஒப்பற்ற இவ்விசையுலக ஒளிக்கோள் மறைந்ததற்கறிகுறியாக அன்றிரவு ஒரு பெரிய விண்மீன் பேரொளிவிட்டு விண்ணிழிந்து விழுந்தது. இதனைக் காழிமாநகரிலும் மன்னார்குடியருகிலுமுள்ளார் பார்த்ததாகச் செய்தித்தாள் கூறுகிறது.

எதிர்பாராத வகையில், முதிரா வயதில், பிள்ளையவர்கள் உலக வாழ்வை நீத்தது தமிழ் நாட்டின் தவக்குறையே. வயது சென்ற அவர் தாயாருக்கும், மனைவியாருக்கும், இரண்டு பிள்ளைகளுக்கும், ஒரு பெண்ணுக்கும் இறைவன் ஆறுதல் அளிப்பானாக. மகனறிவு தந்தை யறிவு என்பதற்கிணங்க இறந்த தம் தந்தையின் இசைக்கலை நலங்களையெல்லாம் கொண்டிலகும் அவர்தம் மகனார் திரு. இரத்தினசாமியைத் தமிழ் நாட்டார் போற்றுவது இறந்த பிள்ளையவர்களுக்குச் செய்யும் இணையற்ற கைம்மாறாகும். திரு. இரத்தினசாமியார் இளமையிலேயே சிறந்த இசைக்கலைவாணர்களில் ஒருவராய்த் திகழ்வது குறிக்கற்பாலது.

இசை யுலகில் பேரிசையுடன் திகழ்ந்து மறைந்த ஒப்பிலா இசைவாணர் நாயனு சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் ஆன்மா தோன்றாத்துணையாய் உடனிருந்து தமிழையும் தமிழிசையையும் தமிழர் பெருமையையும் கைதூக்கிவிடுவதாக. (கா. சிவ. க)

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில்

இரங்கற் கூட்டம்

காலஞ்சென்ற திரு. (நாயனு) சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் பிரிவாற்றுமையைக் குறித்து, சென்னை மார்க்க சகாய சங்கித சபையாரின் ஆதரவில், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் நன்முயற்சியால், சென்ற 7-5-34 ஞாயிறன்று சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் பெரியதோர் இரங்கற் கூட்டம் கூட்டப்பட்டது. அதுகாலை, இராவ் பகதூர் ப. சம்பந்த முதலியார், இராவ் சாஹிப் ம. இராமச்சந்திரஞ் செட்டியார், டைகர் வரதாசாரியார், முசிரி சுப்பிரமணிய ஐயர், திரு. சாம்பமூர்த்தி ஐயர், எம். எஸ். இராமசாமி ஐயர், T. L. வேங்கடராம ஐயர், சித்தூர் இசைவாணர் சி. சுப்பிரமணிய பிள்ளை, திரு. பாண்டியா, ஆர். ஜனார்த்தனம் நாயுகொரு, பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், எம். கந்தசாமி முதலியார், பல பெண்மணிகள் உள்ளிட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட பெருந்தொகையினர் குழுமியிருந்தனர். இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள் தலைமை பூண்டனர். கூட்ட நடைமுறை 5-30-மணிக்குத் துவங்கியது.

தலைவர் முன்னுரை மொழிந்தபின், வித்வான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்களும், வித்வான் காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை, B. A. அவர்களும் பாடிய இரங்கற்பாக்கள் படிக்கப்பட்டன. சென்னை இசைக் கழகத்தார் (Music Academy) அனுப்பிய இரங்கல் மடங்கல் படிக்கப்பட்டது. காலஞ் சென்ற இசைக்கலை முடிமன்னர், மடங்கலேறு திரு. பிள்ளையவர்களின் பண்பு நலங்களைப் பாராட்டித் தமிழிலும் ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் உரைகள் நிகழ்த்தப்பட்டன. இசை வல்லுநர்களான டைகர் வரதாசாரியார், சாம்பமூர்த்தி ஐயர், ஈ. கிருஷ்ண ஐயர், எம். எஸ், இராமசாமி ஐயர் முதலியோர் இசைக் கலை

யுலகில் திரு. பிள்ளையவர்கள் எவ்வாறு ஒப்பும் உயர்வும் அற்ற தனிப் பெருமை வாய்ந்த தனிச் சுடராக விளங்கினார்களென்பதையும், தம்மிடம் சேர்ந்த கற்றுக்குட்டிகளை எவ்வாறு முழு மனதுடன் திறம்பட ஆதரித்து வந்தார்களென்பதையும், இசைக் கலையுலகில் இதுகாறும் எவரும் அறிந்திராத "ஜகன்மோகினி" போன்ற புதிய இராகங்களில் எத்துணைப் பயிற்சியும் பல்லவி யமைத்துப் பாடுந் திறனும் பெற்று இருந்தார்களென்பதையும் பலப்படப் பாராட்டி வியந்து கூறிய உண்மை யுரைகள் அங்குக் குழுமியிருந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகையினரான மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் உருக்கி விட்டது. பிள்ளையவர்களின் அஞ்சாநெஞ்சமும் இசை நுணுக்க ஆராய்ச்சியும் எடுத்து மொழியப்பட்டன. அதன்பின் கூட்டம் சிறிது பொழுது எழுந்துநின்று பிள்ளையவர்களின் பிரிவாற்றாமையினால் நேர்ந்த துக்கத்தைத் தெரிவித்தது. பிள்ளையவர்களின் குடும்பத்தாருக்குஅநுதாபந் தெரிவிப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேறியபின், அவர் ஞாபகச் சின்னம் ஒன்று சென்னையில் நிறுவுதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்ற ஒரு தீர்மானமும் முழுமனதுடன் நிறைவேறியது.

இதற்கென, திவான் பகதூர் கொம்மிரெட்டி சூரியநாராயணராவ் நாயுடுகாரு, சேத்தூர் ஜமீன்தாரவர்கள், இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார், இராவ்சாகிப் ம. இராமச்சந்திரஞ் செட்டியார், புதுக்கோட்டை தட்சிணு மூர்த்திப் பிள்ளை, டைகர் வரதாசாரியார், புரொபஸர் சாம்பமூர்த்தி ஐயர், சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை, நாதசுவரம் வீருசாமி, வேனுநாயர், அனந்த நாராயண ஐயர், வீணை தனம்மாள், சரஸ்வதிபாய், தி. க. இராஜ இராஜன், வி. சுப்பையா பிள்ளை, காழி சிவ. கண்ணுசாமி B. A. T. சங்கரன் B.A. முதலிய பத்தொன்பதின்மர் அடங்கிய ஒரு சிறு குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டு மற்றும் வேண்டியவர்களையும் அவர்கள் இணைத்துக் கொள்ளலாமெனப் பணிக்கப்பட்டது. வசூலிக்கப்படுந் தொகைகளின் வரவு செலவுக் கணக்குகளை மாதா மாதம் 'செந்தமிழ்ச் செல்வி' யிலும் இதர செய்தித் தாள்களிலும் வெளியிடப்படுமென அறிவிக்கப் பட்டபின் கூட்டம் 7-30 மணிக்குக் கலைந்தது.

காஞ்சிமாநகரில்

3-5-1934-ல் துஞ்சிய இசைக்கலை முடிமன்னர், மடங்கலேறு

திரு. (நாயனு) சுப்பிரமணியபிள்ளை யவர்களின்

பிரிவாற்ருமை

I

அருணகிரிப் பெருமானின் அருந்தமிழே விருந்தாக
அகில மெல்லாம்
தருணமெனக் கலந்தருந்தத் தனித்தான அடைவுகளின்
தகைமை எல்லாம்
வருணமிகக் காட்டிவளர் நாயனு வென்றுலகு புகழ்
வளத்தின் மிக்கோய்
தருணமிலாத் தருணமதில் தருவளரும் நாடுபுகல்
தருமந்தானே.

எண்ணுறுநல் இசைவளத்தின் இயல்பனைத்தும் இனிதுணர்ந்த
இசைநலத்தால்
மண்ணுறுநல் இசைப்புலவர் பெருமானென்றுலகேத்தும்
பதம்படைத்தோய்!
மண்ணுறுவார் ஒருவருமிங் குனக்குநிகர் இல்லாமை
மதித்து நீதான்
விண்ணுறுநல் யாழினர்தம் விஞ்சைதனை யளந்திடவும்
விரும்பினையோ.

இதயவெளி யதனின்அரு நடனமிடு ஒளியதனின்
இயல்புணர்ந்தங்
கிதயவொளி பெருகுநிலை யடையவருள் எழில்நாதத்
தின்னலத்தால்
உதயவொளிப் பானுவென உதித்திடுநீ மறைந்திடவும்
உற்றதென்னே
இதயவெளிப் பெருமானின் இன்புகழே நன்புகழா
இசைத்து வாழ்ந்தோய்.

—வித்துவான், பாரிப்பாக்கம், கண்ணப்ப முதலியார்.

II

இரங்கற்பா

இடைச்சங்கந் தனிலிருந்த இசைநுணுக்க மறைந்திடவே
படைத்திடுமோ தமிழ்மொழியும் பார்தனிலே இசைக்கலையே
படைத்திடுமே லிசைக்கலையும் பாங்குறுநற் றீந்தெலுங்கோ
இடைப்புகுந்த வடமொழியோ இயற்றமிழோ வதுமொழியாய். க

என்றுரைத்த மடவோர்க்கு எடுத்தியம்பு நல்விடைபோற்
றுன்றுமரப் பொழில்சூழுந் தூமணியின் றளிநிறைத்து
மூன்றில்வளங் கொழிகாஞ்சி மாநகரந் தனிற்பிறந்து
குன்றெறிந்து சூர்தடிந்த குகப்பெருமான் பெயர்புனைந்தே. உ

இசைதனக்கே யோர்வரம்பா யெழிற்பண்ணின் றூரகமாத்
திசையெங்கும் புகழ்மணக்கத் தேன்றமிழின் பெயர்நிலைக்க
வசையொழிக்குங் கோளரிபோல் வையகத்தே வாய்ப்பாட்டில்
நசைமிகுக்க விசைபொழிந்த நாயகனே நயினுவே! ங

சிறப்புடனே விந்நாளிற் செறித்திசைக்குந் தாளமெல்லாம்
வறப்பறியா மலைநாட்டின் வருமருண கிரிநாதன்
பிறப்பொழிக்க மொழிந்தளித்த பெருமைபெறு திருப்புகழாந்
திறப்புடைநற் களஞ்சியத்திற் றேர்ந்தவெனத் தெளிந்தோயே. ச

மலைக்கோட்டைக் கோவிந்த மாமதியோன் முன்மரித்தான்
தலையோட்டிற் பலிதேர்ந்தோன் றந்ததமிழ் காமிழந்தாள்
நிலைநாட்டிப் புகழ்நிறுத்த நீர்மையனே நீமரித்தாய்
கலைநாட்டித் தலைதூக்கக் காரிகையுங் கண்ணிழந்தாள். ரு

—காழி. சிவ. கண்ணுசாமி. B. A.

III

புள்ளும் விலங்கும் புவிமீதில்
பொருந்துசீவ ராசியெலாம்
உள்ளம் உருகிக் களிப்பெய்ய
ஊட்டும் சிறந்த சங்கீதம்
கள்ள மின்றி யடுத்தவர்க்குக்
கரந்த வித்து வான்நயினுப்
பிள்ளை யிறந்த பொழுதேதன்
பெருமை யிழந்த தெனலாமே. க

கன்னல் புளிக்கத் தேன்கசக்கக்
கனிந்த பாவின் இன்ரசத்தில்
சன்னம் என்னும் சங்கீத
சரக்கைக் கரைத்துப் பாடுவதில்
மன்னே நயினுப் பிள்ளையென
வசையில் சீர்த்தி நிறுவியநீ
இந்நாள் மறைந்தா யெனும்போதே
இசையு மிறந்த தெனலாமே. உ

—S. சங்கரலிங்க முதலியார்.

IV

மாணவர் வாயுரை

ஞாலம் போற்றும் நவையறு தொன்னத்
தமிழக வரைப்பிற் சார்ந்திடு தொண்டை
வளநா டதன்தலை வயங்கிடு காஞ்சி
நன்னகர் தன்னிற் பன்னருஞ் சிறப்பின்
நல்வளஞ் சிறந்த நல்லிசைப் புலவன்
திராவிட ஞானம் திகழ்ந்திட வந்தோன்
மறுவறு காட்சி மாணவர் பலர்க்கு
மகிழ்ந்திடு மிசையின் மணம்நுகர் வித்தோன்
செந்தமிழ் நாட்டுச் சீருடை மக்கள்
யாவருமறிய இசைபெற வாழ்ந்தோன்
இருளுறு ஞாலத் தியற்கைத் தேவி
நலம்பெறு புதல்வன் நாயனுப் பிள்ளையாய்
நானிலத் துயர்ந்த நல்லிசைக் கடலின்
ஆழ்ந்தனை கொல்லோ யாண்டுளங் கொல்லோ
இசைபெறு குழவி எழினலந் துய்க்க
ஏங்கிய மைந்தர் பாங்குடன் கூடி
இயற்றிய கூற்றி னினிமை நுகர்ந்து
ஏந்திய புகழின் என்றும்
வாழ்க நின் கொற்றம் வளநாள் பலவே.

—பண்டிதர், எதிராஜுலு நாயுடு.

கங்கை நீரின் சிறப்பு

[டாக்டர் வி. இ. நெல்சன், எம்.டி.]

கங்கையாறு தெய்வத் தன்மை பொருந்தியதென்றும் அதன் நீர் தூய்மையாய் என்றுங் கெடாத பண்புடையதென்றும் இந்தியர்கள் உறுதி கூறுகிறார்கள். அது எப்பொழுதும் அழுக்கும் நோய்க் கிருமிகளும் மலிந்திருப்ப தொன்றென்று (ஆங்கிலர், ஐரோப்பியர் முதலிய) நாம் கருதுகின்றோம்; ஏனெனில் இந்தியாவின் சிறந்த தெய்வத் தலமாகிய காசி நகரத்தில் நாடோறும் நூறாயிரக் கணக்கான மக்கள் கடமை கருதியும் மத நம்பிக்கை கருதியும் மூழ்கி வருகின்றனர்; சாக்கடை நீர், பிணங்கள் முதலியவும் ஏனைய கழி பொருள்களும் அதன்கண் சேர்க்கப்படுகின்றன என்பவற்றாலேயே.

இவ்வாறிருக்க, கங்கை நதியின் கிளைகளில் ஒன்றாகிய ஹூக்ளி நதியின் நீரை மூகந்துகொண்டு கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்திற்குச் செல்லுங் கப்பல்கள் இங்கிலாந்து சேரும் வரையில் வேறு நன்னீர் தேடாமற் சென்று சேர்கின்றன. இறுதி வரை, ஹூக்ளியில் முகந்த நீர் கெடாமல், தூய்மையாகவே இருந்துவருகின்றது. ஆனால் இங்கிலாந்திலிருந்து இந்தியா நோக்கி வருங் கப்பல்களோ பம்பாய் வந்து சேரும் வரையிற்கூட கெட்டுப்போகாமலிருக்கும் தன்மை வாய்ந்த நன்னீரைப் பெற இயலாதனவா யிருக்கின்றன. பம்பாயிலிருந்து கல்கத்தாவைக் கப்பல் மூலமாய்ச் சென்று சேர ஒரு வாரம் பிடிக்கும் என்பது நினைவு கூர்தற்குரியதாம். இங்கிலாந்தில் தேம்ஸ் நதியின் நீரை முகந்துகொண்டு புறப்பட்டு இந்தியாவின் முன்துறையாகிய பம்பாயைச் சேர்வதற்குள் "போர்ட் ஸெஃட்" என்னு மிடத்தில் ஒரு முறையும், ஸூயஸ் அல்லது செங்கடலிலுள்ள ஏடன் என்னுமிடங்களில் ஏதாவதொன்றில் மற்றொரு முறையும் நன்னீர் தேடிக்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. தேம்ஸ் நதியிலுள்ள நீர் அத்துணை நலங் கெட்டதொன்றா?

கங்கை நீரில் கணக்கற்ற அழுக்கு மலிந்த கழி பொருள்கள் சேர்வதாலேயே அந்நீர் அத்துணைத் தூய்மையுடையதாக இருக்கிறது என்று கூறினால் விந்தையாகத் தோன்றும். ஆயினும் இதுவே உண்மையென்று அண்மையிற் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியலாராய்ச்சி முடிவுகள் வலியுறுத்துகின்றன.

வாந்திபேதி (காலரா) வயிற்றுளைச்சல் (டிஸன்ட்ரி) ஆகிய தொத்து நோய்கள் பெரும்படியாகப் பரவி யிருந்த காலங்களில் அந்நோய்வாய்ப்பட் டிறந்தவர்களைக் கங்கையில் எறிந்தபொழுது, அவ்வாறு எறியப்பட்ட இடங்களிலோ; அவற்றின் இரண்டடிச் சுற்றிலோ நூறாயிரக் கணக்காக இயல்பிலே காணக் கூடிய அந்நோய்ப் புழுக்கள் காணப்படுகின்றனவா என்று டாக்டர். தரேலே என்ற பிரெஞ்சு மருத்துவர் ஆராய்ந்து பார்த்தார்; மருந்துக்குக்கூட ஒரு புழுவை அவர் பார்க்க வியலவில்லை. எனவே, அந்நோய்களால் வருந்

திக்கொண்டிருக்கும் நோயாளிகளின் உடல்களிலிருந்து அவர் அவ் வந்நோய்க்குரிய புழுக்களை எடுத்துப் பெருக்கி அப்புழுக்கள் கொண்ட கலத்தில் கங்கை நீரை ஊற்றினர். ஊற்றி, அக்கலத்திற் சூடேற்றிய போது அப்புழுக்கள் அத்துணையும் இறந்துபடக் கண்டு வியப்புற்றார். அவ்வாறு இறந்துபட்ட புழுக்கள் நிறைந்த நீரின் ஒரு துளியை நோய்ப்புழுக்கள் நிறைந்த மற்றொரு கலத்தில் ஊற்றியபொழுது அக் கலத்திலுள்ள புழுக்கள் அவ்வளவும் இறக்கக் கண்டார். இதனால் கங்கை நீர் காலரா வயிற்றுளைச்சல் ஆகிய நோய்களின் புழுக்களைக் கொன்று அந்நோய்களைத் தடுக்கும் ஆற்றல் வாய்ந்ததெனக் கண்டார்.

இவ்வாராய்ச்சியை யொருபுறம் நிறுத்தி, கங்கை நீரை யருந் தியே காலரா வயிற்றுளைவு முதலிய நோய்களிலிருந்து நீங்கித் தேறிய மக்கள் சிலரின் மலமாகிய கழி பொருளின் துணை கொண்டும் அந் நோய்ப் புழுக்களைக் கொல்வது எளிதெனவுங் கண்டுபிடித்தார். இவ் வாறு கங்கை நீரைக்கொண்டாவது, நோய் கண்டு தேறிய மக்களின் மலப் பொருளின் துணை கொண்டாவது மடிவித்த நோய்ப் புழுக் கரைவு (Solution) கொண்டு காலரா வயிற்றுளைவு கண்ட நோயா ளிகளை ஒரே நாளிற் றேற்றலாம் என ஆராய்ந்து கண்டுபிடித்தார். இக்கரைவு "பெஅக்டீரியோஃபேகெ" என்று ஆங்கிலத்திற் பெயர் பெறும்.

இந்த விந்தையான கரைவைக் கொண்டு காலராவும் வயிற்றுளை வுமேயன்றி, பித்த வாதக் காய்ச்சல், முகப்பரு, குருதிக் கட்டிகள், பிளவைகள், முதலிய ஏனைய பல நோய்களும் தீர்கின்றனவென்றும் அவர் ஆராய்ந்து தெரித்துள்ளார்.

(இந்து) —கா. சிவ. க.

திருநெல்வேலி ஜில்லா நான்குநேரித்தாலுகா மூலக்கரைப்பட்டி நிலக்கிழவரும், திருநெல்வேலிவட்டம் தேவஸ்தான கமிட்டி உறுப் பினரும், நான்குநேரி தாலுகா போர்டு தலைவரும் ஆகிய திரு. B. குருவையா ரெட்டியார் அவர்கள் சென்னையில் மே 1௳ விண் ணுலகடைந்தது பெரிதும் இரங்கற்பாலது. அவர்கள் பிரிவாற்றாது வருந்தும் சென்னைக் கல்வி யமைச்சர் திவான்பகதூர் S. குமாரசாமி ரெட்டியாரவர்கட்கும், சுற்றத்தார்க்கும் இறைவன் ஆறுதலளிப்பானாக.

அரசியல்வல்ல திரு. ஸர். சங்கரன் நாயரும், உயர்தர நீதி மன்ற நீதிபதியாயிருந்து ஓய்வு பெற்ற ஸர். வி. வி. குமாரசாமி சாஸ்திரி யாரும், மருத்துவக்கலை மேதாவியான டாக்டர். எஸ். அரங்காசாரி யாரும், வாணிப திலகரான ஸர். ஹாஜி இஸ்மெயில் சேட்டு அவர் களும் இவ்வுலக வாழ்வை நீத்தமை பெரிதும் வருந்துதற்குரித்தாம்.



அஷ்டாவதானம்

பூவை-கலியாண சுந்தர முதலியார்

54

18~~45~~—1918.